# ஜாமக்காரன்

# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 8 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 1**
**JANUARY 2024 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**

Mob.: No. **9894261333**
0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பான வாசகர்களே !

யாவருக்கும் எங்கள் புதுவருட வாழ்த்துக்கள். 2024 புதுவருடத்திலும் இனி வரும் காலங்களிலும் வாசகர்கள் யாவரும் ஆவிக்குரிய வளர்ச்சி பெற்று ஆரோக்கியத் தோடும், சமாதானத்துடனும் சம்பூர்ணமாகவும் இருக்க கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

(2023) கடந்த வருடம் முழுவதும் மாதம் தவறாமல் Online, M.O. காசோலை மூலமாக காணிக்கைகளை அனுப்பி இந்த ஊழியத்தை குறைவில்லாமல், கடனில்லாமல் நடத்தி செல்ல உருதுணையாக இருந்த வாசகர்கள் அனைவரையும் வாழ்த்துகிறோம். SBI, Canara Bank மூலமாகவும் நீங்கள் Online மூலமாகவும் நீங்கள் ஒவ்வொருவரும் அனுப்பிய அத்தனை காணிக்கைகளையும் வங்கி பாஸ்புக் மூலமாக ஒவ்வொரு நாளும் நீங்கள் அனுப்பிய பண வரவை பார்த்து தேவனை துதித்தோம்.

உங்கள் ஜெப குறிப்புகளுக்காகவும் நானும் என் மனைவியும் சேர்ந்து உங்களுக்காக தேவனைத் துதித்தோம்.

**அன்னிய பாஷை குழப்பம்** என்ற தலைப்பில் நான் அன்னிய பாஷைகளைக் குறித்து விளக்கமாக ஏற்கனவே சில வருடங்களுக்கு முன் எழுதிய விவரத்தையும் அதைத்தொடர்ந்து மீதியுள்ள விவரங்களையும் எழுதிய விவரங்களை இனி ஒவ்வொரு மாதமும் வெளியிடுவேன்.

**JANUARY - 2024**

அவைகளை வாசகர்களாகிய நீங்களே ஒன்று சேர்த்து பைண்டு செய்துவைத்துக் கொள்ளலாம். அதை மற்றவர்களுக்கும் வாசிக்க கொடுக்கலாம். **வேதத்தை நன்கு முறையாக வாசித்தவர்கள் மட்டுமே** அதை விளங்கிக் கொள்வார்கள்.

விளங்கிக் கொள்பவர்கள் விளங்கிக்கொள்ளட்டும். விளங்கி கொள்ளாதவர்களிடம் வாக்கு வாதம் செய்யாதீர்கள்.

**அன்னிய பாஷை** உண்டு **அது வரமாக** கொடுக்கப்பட்டது.

**அன்னிய பாஷை அடையாளமாக** கொடுக்கப்படவில்லை.

அன்னிய பாஷை வரம் என்பது Gift அது கர்த்தரால் கொடுக்கப்படுவது. **கேட்டுப் பெற்றுக்கொள்வதல்ல.** வாசகர்கள் யாவரையும் இப்படிப்பட்ட அன்னிய பாஷை என்ற பெயரில் போலியான உளரல்களிலிருந்து காப்பாற்றுவராக. ஜெபிக்கிறேன்.

டாக்டர் **புஷ்பராஜ்**

---

# கெஸ்விக் முகாம், கோவில்பட்டி



# 2024 பார்லிமெண்ட் தேர்தல் மிகவும் ஆபத்தானது.

இந்த தேர்தலில் இப்போதைய அளும் கட்சியான **BJP** வென்று பூர்ண மெஜாரிட்டியுடன் ஜெயித்துவிட்டால். இந்திய முழுவதும் உள்ள குறிப்பாக **கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியருக்கும்** மிகப்பெரிய ஆபத்து. ஜாக்கிறதை !

BJP கட்சிக்கு பின்னால் மிகப்பெரிய **இந்துமத தீவிரவாதிகளான** R.S.S. என்ற பெரிய இயக்கம் உண்டு. அவர்கள்தான் நம் இந்தியாவுக்கு விடுதலை வாங்கித்தர **பெரிய தியாகம்** செய்த **மகாத்மா காந்தி** அவர்களை **கோட்சே** என்ற ஆளை ஏற்பாடு செய்து காந்தி அவர்களை சுட்டுக்கொல்ல ஏற்பாடு செய்தார்கள். இந்திய நாட்டை **இந்து** நாடாக மாற்ற எந்த எல்லைக்கும் போக R.S.S. - BJP தயாராக இருக்கிறார்கள்.

BJP ஜெயிக்க முன்பு ஹரியானாவில் ஒரு MPக்கு **41 கோடிகள்** கொடுத்து தன் கட்சிக்கு பூர்ண மெஜாரிட்டிபெற எதிர்கட்சி பக்கம் இருந்த MPகளை BJP கட்சிக்கு மாற வைத்துவிட்டார்கள். ஆகவே அதே குறுக்கு வழியில் இந்த முறையும் BJP கட்சி ஆட்சிக்கு வருவது உறுதியாகிவிட்டது போல் தோன்றுகிறது. நம் தெய்வம் அனுமதிக்காது எதுவும் சம்பவிப்பதில்லை.

## எப்படி BJP ஆட்சிக்கு வரும் ?

இரண்டு குறுக்கு வழிகளில் அவர்கள் ஜெயிக்க சாத்தியங்கள் உண்டு.

1) BJP கட்சியின் தலைமையான R.S.S. இந்துமத தீவிரவாதிகளிடம் எண்ணிக்கைக்கு **அடங்காத பணம்** குவிந்து கிடக்கிறது. BJP க்கு எதிராக **இந்தியா** என்ற கூட்டணியை ஆரம்பிக்க காரணமாக இருந்த திரு. **நிதிஸ்குமார்** அவர்களையே **பல கோடிகள்** கொடுத்து **இந்தியா** என்ற கூட்டணியிலிருந்து பிரித்து **பீகார்** மாநிலத்தில் BJP யுடன் கூட்டணி வைத்து ஆட்சியை கவிழ்த்து BJP கூட்டணியுடன் **நிதிஷ்குமாரை** சேர்த்து **பீகார்** மாநில **முதல்வராக்கினார்கள்.** ஒரு MPயை 41 கோடிக்கு விலை பேசி தன் பக்கம் இழுத்த BJP **நிதிஷ்குமாரை** இந்திய கூட்டணியிலிருந்து பிரிக்கவும் அவரை **முதல்வர்** ஆக்கவும் **எத்தனை கோடிகள்** கொடுத்திருக்க வேண்டும். இதைப்போலவே **இந்தியா** என்ற கூட்டணி அல்லது காங்கிரஸ் ஜெயித்தாலும் அவர்களின் MPக்களை BJP விலைக்கு வாங்க எவ்வளவு நேரம் ஆகும்.இவர்கள் லஞ்ஜமாக வாங்கும் கோடிகளை இந்தியாவில் எந்த பேங்கிலும் போடமுடியாது. வருமான வரித்துறை கண்டுபிடித்துவிடும். **தங்கமாக** மாற்றி வீட்டில் வைத்தாலும் பிடிபடுவார்கள். ஆகவே வெளிநாட்டில் இரண்டு தேசங்களில் R.S.S. இயக்கத்தினரே அவரவர் பெயரில் கோடிகளை சேர்க்க உதவி செய்வார்கள்.

2) இரண்டாவதுவழி **ஓட்டு போடும் மிஷின்** மூலமாக ஓட்டுகள் யாவும் BJP க்கே விழும்படி ஏற்பாடு செய்ய நிறைய வல்லுனர்கள் இவர்களிடம் உண்டு. புதிதாக வாங்கிய **ஓட்டுபோடும் மிஷின்களில் 6லட்சம் மிஷின்கள்** ரிப்பேர் செய்ய கொடுத்துள்ளதாக கேள்விப்படுகிறோம். புதியதாக வாங்கிய மிஷின்கள் ஒன்று அல்லது இரண்டு ரிப்பேர் ஆகலாம். **6 லட்சம் ஓட்டு கருவிகள்** ஒட்டுமொத்தமாக எப்படி **ரிப்பேர்** ஆகும். **ரிப்பேர்** செய்யும்போது கருவிக்குள் நகம் அளவைவிட சிறிய சிப் உள்ளே சொருகி வைத்துவிட்டால்போதும். மக்கள் இடும் ஓட்டுகள் BJPவிக்கே விழும். இப்படிப்பட்ட கருவிகளில் BJPக்கே விழும் என்பதை பல வல்லுனர்கள் செயல் முறையில் அது சாத்தியமானதே என்று செய்து காட்டினார்கள். ஆனால் நீதிமன்றம் இவர்கள் கூறியதை நிராகரித்துவிட்டது. இந்த காரணத்தால்தான் எலக்ட்ரானிக் பொருள்களில் பிரசித்திபெற்ற அமெரிக்கா, ஐரோப்பா. அஸ்திரேலியா, சீனா, சிங்கப்பூர் நாடுகளில் இப்பவும் **ஓட்டு சீட்டுதான்** பயன் படுத்துகிறார்கள்.

BJP ஜெயித்துவிட்டால் பொது சிவில் சட்டம் கொண்டுவரப்படும். இப்போதைய உத்திரகாண்ட், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் **பொது சிவில் சட்டம்** கொண்டுவர சட்டசபையில் சட்டம் நிறைவேற்றிவிட்டனர். ஒரே மதம், ஒரே நாடு, ஒரே மொழி என் சட்டம் நிறைவேற்றப்பட்டால் நாடு முழுவதும் மதக் கலவரம் வெடிக்கும்

# பொது சிவில் சட்டம் ஏன் தேவையில்லை ?

**இடதுசாரி அமைப்புகள்** இந்த சட்டத்தை ஆரம்பத்தில் எதிர்த்தன. காரணம் **கம்யூனிசத்தின்** சமூக பொருளாதார சித்தாந்தங்களில் **மதங்களுக்கு** எந்த இடமும் இல்லை.

**மாநிலங்களுக்கான தனிச் சிறப்பு சட்ட பிரிவுகள்**

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் அம் மக்களின் தேவைக்கேற்ப **தனிச்சட்டங்கள்** நடைமுறையில் உள்ளன. 371 மராட்டியம், குஜராத், 371A, நாக்லாந்து, 371B அஸ்ஸாம், 371C, மணிப்பூர், 371D ஆந்திரா, 371Eதெலுங்கானா, 371F சிக்கிம். 371G மிசோராம். 371–I கோவா

சட்டம் 370 என்ற ஜம்மு காஷ்மீரின் சிறப்புச்சட்டம் அண்மையில் நீக்கப்பட்டது. **திரிபுரா** மாநிலத்திற்கான **பாதுகாப்பு சிறப்புச் சட்டம்** அண்மையில் இயற்றப்பட்டது.

ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனியான **ஆட்சி மொழிச் சட்டம்** நடைமுறையில் உள்ளது. தமிழ்நாடு, கேரளா, **கர்நாடக** மாநிலங்களில் ஆட்சி மொழி இல்லை, இரு மொழி கொள்ளை மட்டும் உண்டு. **பசுவதை,** மது தொடர்பான சட்டங்களில் **மாநிலங்களிடையே** வேறுபாடு உள்ளது. **அருணாசலப் பிரதேசம்,** மிசோராம் மேகாலயா, நாகாலந்து திரிபுரா, சிக்கீம், கேரளா, மேற்கு வங்கம் ஆகிய மாநிங்களில் **உணவுக்காக மாடுகளை** அறுப்பது தடை இல்லை. அப்படியே இடஒதுக்கீடு வருமானவரிப் சட்டங்களில் **மாநிலங்களிடைய வேறுபாடுகள்** உள்ளன.

**அரசியலமைப்புச் சட்டத்தின் வழிகாட்டும் நெறிமுறைகள்**

**அரிசியலமைப்பு சட்டத்தின் வழிகாட்டும் நெறிமுறைகள்** என்ற இந்தத் தலைப்பில் தான் **பொது சிவில்** சட்டத்தைப்பற்றிய குறிப்பு உள்ளது. இந்தத் தலைப்பில் உள்ள விஷயங்களை கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை. உதாரணமாக மாநிலங்கள் அனைத்து மட்டத்திலும் **பொருளாதார** ஏற்றத்தாழ்வுகளை **அகற்றவேண்டும்** என்பது **வழிகாட்டும் நெறிமுறை** ஆகும். ஆனால் நடைமுறையில் ஏழை பணக்காரகளிடையே பொருளாதார இடைவெளி அதிகமாகிக்கொண்டே செல்கிறது. (Forbes) நிறுவனம் வெளியிட்டுள்ள முதல் 100 உலக பணக்காரர்கள் பட்டியலில் **சில இந்தியர்கள்** மட்டும் இடம் பெற்றுள்ளனர். சில குறிப்பிட்ட விரல் விட்டு எண்ணக்கூடிய இந்தியர்களிடமே பெரும் சொத்து சேர்ந்துள்ளதை இப்பட்டியல் வெளிப்படுத்துகின்றது.

**நவீன பொருளாதாரச் சந்தை** மனிதனை ஒரு **நுகர்வுப் பொருளாகப்** பார்க்கிறது. நவீன பெண்ணியக் கோட்பாட்டினால் **பெண்கள்** அதிக துன்புறத்தலுக்கு உள்ளாகின்றனர்கள். ஆண்கள் இதனை பயன்படுத்தி **பெண்களை போகப் பொருளாகப்** (ரேப்) பயன்படுத்துகின்றனர்.

**மனிதர்களின்** ஆரோக்கியம், அமைதியான வாழ்க்கை பற்றிய எந்த கவலையும் **நவீன பொருளாதார சந்தைக்கு** இல்லை. இதன் விளைவாக கட்டுப்பாடற்ற **பாலுறவு,** ஒரு **இனப்**

**பாலுறவு, விபச்சாரம்,** மது, **போதை** சூதாட்டம் போன்ற **சமூக தீமைகள்** மலிந்து காணப்படுகின்றது. இத்தகைய தீமைகள் பல்வேறு நோய்களையும், (RAP) **பாலியல் வன்புணர்வு** போன்ற குற்ற செயல்களையும் அதிகப்படுத்தி உள்ளன.

ஆண்டுதோறும் உலகலவில் 70 லட்சம் குழந்தைகள் கருவிலேயே கொல்லப்படுகின்றனர். Utah என்ற அமெரிக்க பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் 7% பெண்கள் **15க்கும் மேற்பட்ட ஆண்களுடன்** பாலுறவில் உள்ளனர் என்று தெரியவந்துள்ளது. அமெரிக்க மக்கள் தொகையில் 7.1% **ஒருஇன** பால் உறவாளர்கள் ஆகும். Child trends அமைப்பின் ஆய்வில் அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகளில் 40% திருமணத்திற்கு வெளியேயான **தவறான உறவில்** பிறக்கிறார்கள். 24 லட்சம் குழந்தைகள் **ஒற்றை பெற்றோருடன்** வளர்கிறார்கள் என்று தெரிவித்துள்ளனர். இந்தியாவிலும் இத்தகைய போக்குகள் உருவாக தொடங்கியுள்ளது. **திருமணம்** செய்யாமல் **சேர்ந்து வாழும்** (Living together) ஆண் பெண் தொடர்பினால் **பல கொலைகள்** நடந்துள்ளன. பொது சிவில் சட்டத்திற்கு கடந்த 2021ம் ஆண்டில் **தேசிய சட்ட ஆணையம் ஆதரவு தெரிவிக்கவில்லை.** வேற்றுமையில் ஒற்றுமை என்பது **இந்தியாவின் அடி நாதம்.** பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவது **அமைதியை சீர் குலைக்கும்.** எல்லா மதத்தை சேர்ந்தவர்களும் பொது சிவில் சட்டத்தை ஆய்வு செய்தால் அவர்களுக்கு தீர்க்கவேண்டிய நிலை வரும்.

மேலே வாசித்த காரணங்களால் BJP கட்சி தேர்தலில் ஜெயிக்காமல் இருக்க கூட்டணி கட்சிகள் தங்கள் வேறுபாடுகளை மறந்து ஒரே கட்டாக நின்று தங்கள் அதரவாளர்களை ஒரே கட்சிக் சின்னத்துக்கு ஓட்டு இடும்படி கட்டளையிட்டால் நிச்சயம் BJP தோற்கடிக்கப்படும்.

கூட்டணி கட்சிகள் தனித்தனியாக நின்றால் BJP நிச்சயம் ஜெயிக்கும். 18 வயதானவர்கள் Online மூலம் தங்கள் பெயரை சேர்க்க ஏற்பாடு செய்ய முடியும். ஒவ்வொருவரும் **ஓட்டர் லிஸ்டில்** தங்கள் பெயர் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்பதை கண்டிப்பாக பரிசோதிக்க வேண்டும். உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதை Online மூலமாகவே கண்டரிந்து பெயர் சேர்க்க இப்போதே ஏற்பாடு செய்துகொள்ளுங்கள். இதற்கு யாருக்கும் லஞ்ஜ பணம் கொடுக்க தேவையில்லை. நீங்களே கம்ப்யூட்டர் சென்டர் சென்று ஓட்டர் லிஸ்டில் உங்கள் பெயர் உண்டா இல்லையா என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

***அன்பானவர்களே !***

இதில் நீங்கள் கவலையற்றிருந்தால் இந்தியாவுக்கு பெரும் ஆபத்து. உங்கள் **ஒரு நபர் ஓட்டு** இந்தியாவின் **ஆட்சியை மாற்ற வல்லது.** இது இந்திய மக்களின் கடமையாகும்.

**நம் நாட்டை** பற்றியும் **தேர்தலைப்பற்றியும்** அக்கரையில்லாமலிருந்தால் கர்த்தர் கணக்கு கேட்பார். இதில் தெளிவில்லாமல் அக்கரையற்று இருந்தால் நீங்கள் எத்தனை உபவாச ஜெபம் நடத்தினாலும். முழு இரவு ஜெபத்தில் பங்கு கொண்டாலும் அதை கர்த்தர் கண்டுகொள்ள மாட்டார். கர்த்தர் தம் மக்களை **பார்வோன்** கையிலும், **பெலிஸ்தர்** கையிலும் ஒப்புக்கொடுத்ததைபோல் BJP கையில் **நம் நாட்டை** ஒப்புக்கொடுப்பார்.

BJP ஜெயித்தால் **மணிப்பூர்** கதிதான் வரும் . ஆலயங்கள் தகர்க்கப்படும். **ஜெபிக்க ஆராதிக்க** அனுமதியில்லாமல் போகும். **கொரோனா** காலத்தைபோல் ஆலயங்கள் பூட்டப்படும். BJP கொரோனாவைவிட ஆபத்தானவர்கள். ஜாக்கிறதை !

# அன்னிய பாஷை குழப்பம் 1

# ஜாமக்காரன் வெளியீடு



ஸ்தாபகர்-ஆசிரியர்

*வெளியிடுபவர்:*

**Dr. புஷ்பராஜ்,** சேலம் - 636 005.

பல வருடங்களுக்கு முன்பே அன்னிய பாஷையைப்பற்றி சின்ன சின்ன கட்டுரைகளாக அவ்வப்போது ஜாமக்காரனில் வெளியிட்டேன். கேள்வி - பதில் பகுதியிலும் பல **விளக்கங்களை** வெளியிட்டேன். ஏறக்குறைய அதன் தொகுப்புதான் இது. ஆனால் முன்பு மாதாமாதம் வெளியிடப்பட்டது போல் அல்லாமல் இது வரிசைகிரமமாக புத்தக வடிவில் அமையும். வாசிக்கிற உங்களுக்கு அன்னிய பாஷைப்பற்றிய விஷயங்கள் **வேத வசன** அடிப்படையில் நிச்சயம் விளங்கும். இதற்கு மேலும் உங்களுக்கு **சந்தேகம்** இருந்தால் உடனுக்குடன் எனக்கு எழுதுங்கள். அதற்கான பதில் மற்றவர்களுக்கும் பிரயோஜனம் உண்டாக ஜாமக்காரனில் எழுதுவேன். **கேள்வி கேட்பவர்** தங்கள் முழு விலாசத்தையும், தொலைபேசி எண்ணையும் நிச்சயம் குறிப்பிடவேண்டும். **மொட்டை கடிதம்**போல் எழுதுபவர்களின் கடிதத்தை நான் வாசிப்பேன். ஆனால் அதற்கு ஜாமக்காரனில் பதில் எழுதினாலும் அவர்களின் பெயரோ விலாசமோ ஜாமக்காரனில் வராது. இது சம்பந்தமாக பாஸ்டர்களோ, விசுவாசிகளோ யார் எழுதினாலும் அவர்களின் **பெயரோ விலாசமோ பத்திரிகையில் வெளியிடமாட்டேன்.** ஆகவே தைரியமாக கேட்கலாம், (என்னை தாக்கியும் கேள்வி கேட்கலாம். என்னை விமர்சிக்கவும் செய்யலாம்).

☐ **விளக்கம் அறியவேண்டும்** என்று உண்மையாக விரும்புகிறவர்கள்தான் **கேள்வி கேட்பார்கள்.** அப்படிப்பட்டவர்களுக்கு பதில் கொடுக்கலாம். வசன விளக்கத்தை விரும்பாதவர்கள் அல்லது **விளக்கத்தை ஒத்துக்கொள்ளாதவர்கள்** கேள்விகேட்டால் **பதில் கொடுக்ககூடாது.** காரணம், அவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். வாக்குவாதத்துக்கு நாங்கள் வரமாட்டோம் என்று பவுல் கூறியிருக்கிறார்.

# முதலாவது நீங்கள் அறிந்துகொள்ளவேண்டியது:

☐ Dr. புஷ்பராஜ் ஆகிய நான் **பரிசுத்தாவியானவரை** நம்புகிறேன்.

☐ **பரிசுத்தாவியானவரை** எனக்குள் பெற்றிருக்கிறேன்.

☐ பரிசுத்த ஆவியானவர் **ஆவியை பகுத்தறியும்** வரத்தை எனக்கு அருளியிருக்கிறார் என்று நம்புகிறேன். அதனால்தான் எந்த ஊழியர்கள் பேசினாலும் அவர்கள் **எந்த ஆவியினால்** பேசுகிறார்கள், அவர்கள் உபதேசம் சரியானதுதானா என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

☐ ஆவியானவர் என்னில் நிறைத்துள்ளதால்தான் கர்த்தர் எனக்கு **வரங்களை** நல்கி நான் ஊழியத்துக்கு செல்லும் **இடங்களில் என்னிடம்** ஜெபிக்க வரும் **மக்களிடம்** அல்லது நான் பேசும் கூட்டங்களில் அந்தந்த **இடத்துக்கு தேவையான** அற்புதங்களை, **சுகங்களை, ஆலோசனைகளை, எச்சரிப்புகளை** அறிவித்து அவராகவே என்னை பேசவைத்து எனக்கு கர்த்தரால் அனுமதிக்கப்பட்ட **வரங்களை** கர்த்தர் **ஆவியானவர்** என் மூலமாக செயல்படுத்தி தன் நாமத்தை மகிமைப்படுத்துகிறார். அவைகளை அனுபவித்த உங்களில் பலர் அதை அறிவார்கள். அந்த சாட்சிகளை நீங்கள் எனக்கு எழுதி அறிவித்ததின் மூலம் அதற்காக தெய்வத்தை துதிக்கிறேன்.

நான் **பிரசங்கிக்கும்போது** என் மூலமாக கர்த்தர் அருளும் வசனங்கள் மூலமாய் பலவிதமான கூட்டங்களிலும், நபர்களிலும் பலவித அற்புத கிரியை நடக்கிறது. அந்த கிரியைகளையும்,சாட்சிகளையும் நான் என் **பத்திரிக்கையில்** வெளியிடுவதில்லை. கூட்டம் நடக்கும் **மேடையிலும் அற்புதம் கிடைத்த நபர்களையோ, மனம்திரும்பின நபர்களையோ** சாட்சி கூற அனுமதிப்பதில்லை. அந்த சாட்சியை பத்திரிகையில் வெளியிடவும் நான் **அனுமதிப்பதில்லை.** அப்படி வெளியிட்டால் அது ஊழியக்காரனாகிய **என்னைத்தான் பெருமைப்படுத்தும்.** ஆனால் இப்போது அற்புதங்களை பெற்றுக்கொண்ட நபர்கள் வாய் மொழியாக ஒருவர் மற்றவர்களுக்கு என் பிரசங்கத்தை பற்றியும் நான் ஜெபித்ததின் மூலம் தாங்கள் அனுபவித்த **நன்மைகளை,** கிடைத்த **எச்சரிப்புகளையும், ஆலோனைகளையும்** அவர்கள் அதை தீர்க்கதரிசனமாக எண்ணி மற்றவர்களிடம் அதை அறிவிக்கிறார்கள். அது கர்த்தரை மட்டும் மகிமைப்படுத்தவும் அதை கேட்கிற மக்கள் Dr. புஷ்பராஜ் ஆகிய என்னை தேடாமல் கிரியை நடப்பித்த இயேசுகிறிஸ்துவிடம் தொடர்புகொள்கிறார்கள். அதனால் அவர்கள் கர்த்தரை அறிந்துகொள்கிறார்கள். இதுதான் **எனக்குள்** பரிசுத்தாவியானவர் இருக்கிறார் என்பதற்கான உறுதியாகும்.

அதோடு என் தனிப்பட்ட ஜீவியம், வீட்டிலும், வெளியிலும் செயலின் மூலமாக காணப்படும் சாட்சியின் மூலமாக **ஆவியானவர் எனக்குள் இருக்கிறார்** என்பதை வெளிப்படுத்துகிறது. இந்த பரிசுத்த ஆவியானவர் என் ஊழியங்களுக்குள் மட்டுமல்ல, வசனத்தை கேட்டு மனம் திரும்பின கிறிஸ்தவ விசுவாசிகள்அனைவருக்குள்ளும் இறங்கி அதே கிரியையை நடப்பிக்க விரும்புகிறார்.

☐ **இந்த பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்வது எப்படி?**

☐ **பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொண்டோம் என்பதற்கு என்ன அடையாளம்?**

மேலே வாசித்த கேள்விகளில்தான் குழப்பமே பலருக்குள் ஏற்படுகிறது. இந்த முக்கியமான விஷயங்களை சிந்திக்கும்முன் சில அடிப்படை வேத சரித்திர விவரங்களை வாசகர்கள் அறிந்துக்கொள்ளவேண்டியது மிக அவசியம்.

## நான் எழுதப்போகும் விஷயம்

ஜாமக்காரனை பல வருடங்களாக வாசித்து அவைகளை பைண்ட் செய்து வைத்திருக்கிறேன். நான் ஜாமக்காரன் Dr. புஷ்பராஜ் அவர்களின் தீவிர ரசிகன். பல வருடமாக தொடர்ந்து ஜாமக்காரனுக்கு **காணிக்கை அளித்து வருகிறவன்** என்று நீங்கள் கூறிக்கொண்டாலும், நீங்கள் **மனம்திரும்பாதவர்களாக** இருந்தாலோ, வேத புஸ்தகத்தை **கிரமமாக வாசிக்காதவர்களாக இருந்தாலோ** நான் எழுதிவரும் **அன்னிய பாஷையை குறித்தும், பரிசுத்தஆவியானவரின்** கிரியைக்குறித்தும் நிச்சயம் உங்களுக்கு விளங்காது.

அப்படியே இதை வாசிக்கும் நீங்கள் **தலைமை பாஸ்டராகவோ, பிஷப்பாகவோ, உலக பிரசித்திப்பெற்ற பிரசங்கியாராகவோ** இருந்தாலும் **மனந்திரும்புதலின்** அனுபவம் இல்லாமல் இருந்தால் நான் எழுதும் அன்னிய பாஷைக்குறித்து விளங்கிக்கொள்ளமுடியாது. **வேதாகம கல்லூரியில்** உயர்ந்த பட்டங்கள் பெற்றிந்தாலும் அல்லது வேதாகம கல்லூரியில் ஆசிரியராக அல்லது புரபசராக இருந்தாலும் உங்களில் மனம்திரும்புதலின் அனுபவம் இல்லாமல் போனால் நான் எழுதும் **அன்னிய பாஷை** விளக்கத்தை உங்களால் விளங்கிக்கொள்ள முடியாது என்பதை முதலில் நீங்கள் அறியவேண்டும். அப்படியே ஊழியர் அல்லது விசுவாசியாக இருந்தாலும் **சுகம் அளிக்கும் வரம் பெற்றவராக** இருந்தாலும் பலவருடம் சபை மக்களை **அபிஷேகத்தில்** வழிநடத்தியிருக்கிறேன் என்றாலும் **மனம்திரும்புதல்** இல்லாமல் **அன்னிய பாஷை** விளக்கத்தை விளங்கிக்கொள்ளஇயலாது.

- ☐ ஆகவேதான் சரியாக **மனம் திரும்புதலின்** அனுபவம் பெறாதவர்கள் **அன்னியபாஷை** குறித்து தர்க்கிக்கவோ,விமர்சனம் செய்யவோ தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

### மலேசியா பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கள் மத்தியில் நான்:

- ☐ மலேசியா பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கள் அனைவரையும் பல இடங்களில் கூட்டி சேர்த்து **அன்னிய பாஷையைப்பற்றி** மட்டும் விவாதிக்கவும் அதே கூட்டத்தில் கேள்வி - பதில் பகுதியையும் ஏற்பாடு செய்திருந்தார்கள். அனைத்து பெரிய - சிறிய சபைகளின் பாஸ்டர்களை மலேசியாவிலேயே பல்வேறு ஊர்களில் அவர்களை ஒன்று சேர்த்தார்கள். அவர்களை ஒரு இடத்தில் ஒன்று கூட்டி **என்னை அவர்கள் மத்தியில் அமரவைத்து,** எங்கள் சம்பாசனைகளை பதிவு செய்ய **வீடியோ** ஏற்பாடுகளையும் செய்து, அந்த கூட்டங்களில் **பாஸ்டர்கள்** யாவரையும் என்னிடம் **அன்னிய பாஷையைப்பற்றி கேள்விகேட்கும்** ஏற்பாட்டை அருமையாக செய்திருந்தார்கள். பெரும்பாலான பாஸ்டர்கள் **தர்க்கம் செய்யாமல், கோபப்படாமல் கேள்விகளை** எழுதிவைத்து ஒன்றன்பின் ஒன்றாக **கேள்விகள்** கேட்க, நானும் வேத புத்தகத்தின் அடிப்படையில் பதில்களை உடனுக்குடன் அளித்ததோடு நானும் அவர்களிடம் வெளியரங்கமாக கேள்விகளை கேட்டேன். கூட்டங்கள் வெற்றிகரமாக முடிந்தது.

இந்த சம்பவத்தை இங்கு நான் எழுத முக்கிய காரணம் என்னவென்றால் மலேசியாவில் பல இடங்களில் கூட்டிய பாஸ்டர்மார் கூட்டங்களில் சம்பாசனைகளில் பங்குக்கொண்ட **பாஸ்டர்மார்களில்** பெரும்பாலானவர்கள் வேதம் கூறும் அடிப்படை **மனம்திரும்புதலின்** அனுபவம் இல்லாதிருந்தார்கள் என்பதுதான் பெரும் வேதனைக்குரிய விஷயம். அவைகளை விளக்க நான் விரும்பவில்லை.

☐ பெரும்பாலான பெந்தேகோஸ்தே பாஸ்டர்மார்களுக்கு **பாடல் ஆராதனை, அபிஷேக ஆராதனை,** அக்கினி அபிஷே அனுபவ ஆராதனை வல்லமையான பிரசங்கம்,**தரிசனம், தீர்க்கதரிசனம்** இப்படி பல அனுபவங்களைக்குறித்து தங்கள் சபைகளில் பேசுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு மனம்**திரும்புதல் இல்லையே**! வீட்டில், சபையில், சபை பணத்தில், **சாட்சியில்லையே**! பல விஷயங்களில் அவர்கள் சபை மக்களிடம் நிறைய **பொய்** பேசுகிறார்களே! இதை அவர்களின் சொந்த குடும்பத்தினர் அவர்களைப்பற்றி இரகசியமாக சொல்லப்படும் வேதனையான சாட்சியாகும்.

இந்த நிலைதான் இந்தியாவிலும் **உலகெங்கும் பரவியுள்ளது.** குறிப்பாக **வெளிநாடுகளில் வாழும்** புலம்பெயர்ந்த **இலங்கை தமிழ் சபைகளின் பரிதாப நிலையும் இதுதான்.**

ஆகவேதான் **அன்னிய பாஷையைக்**குறித்து நான் அளிக்கும் விளக்கங்களை வாசிக்கும்முன் வாசிக்கிற யாராயிருந்தாலும் மனம்திரும்புதலின் அனுபவம் உள்ளவர்கள் மட்டுமே நான் எழுவதை விளங்கிக்கொள்வார்கள். மற்றவர்கள் பெயர் அளவில் ஒத்துக்கொள்வார்கள். அது அவர்கள் ஆத்துமாவுக்கு ஆசீர்வாதமாக இருக்காது.

## வேத வசனத்தை எப்படி விளங்கிகொள்வது?

☐ ஒரு வசனத்தை வாசித்தால் அந்த **வசனத்துக்குமேல்** உள்ள வசனங்களையும் அந்த **வசனத்துக்கு** கீழ்உள்ள வசனங்களையும் வாசித்தால்மட்டுமே அந்த குறிப்பிட்ட வசனத்தின் அர்த்தம் விளங்கும்.

அடுத்தது வாசிக்கும் குறிப்பிட்ட வசனத்தின் **சரித்திர பின்ணனி** என்ன? எந்த **சூழ்நிலையில்** எழுதப்பட்டது.? அந்த வசனம் **யாருக்காக** எழுதப்பட்டது.? அந்த வசனத்தை அல்லது அதிகாரத்தை **எழுதியவர் என்ன நோக்கத்தோடு** அதை எழுதினார்? எழுதிய நபர் அதை எழுதும்போது **எந்த நிலையில்** இருந்தார் போன்ற விவரங்களைக்குறித்து அறியாமல் எந்த ஒரு வசனத்தின் அர்த்தத்தையும் நேரிடையாக எடுக்கக்கூடாது. அது ஆபத்து. உங்கள் **உபதேசத்தையும்,** உங்களையும் அது குழப்பிவிடும்.

☐ அப்படியே சில குறிப்பிட்ட **வசனங்களின்** அர்த்தத்தை அதில் எழுதியபடியே நேரிடையாகவே எடுத்துக்கொள்ளலாம். அதில் பிழையில்லை.

சில வசனங்களுக்கு **ஆவிக்குரிய அர்த்தம் மட்டுமே** எடுத்து பயன்படுத்தவேண்டும்.

*உதா.:* மத் 5: 29,30 இடறல் உண்டாக்கும் வலது கண்ணை பிடிங்கிபோடு, **கையை** வெட்டிப்போடு என்று இயேசு கூறினார். இதில் **வலது** கண் **வலது** கை இடறல் உண்டாக்கினால்

!



அதை பிடிங்கிபோடு என்றால் உண்மையாக கண்ணை, **கையை வெட்டி எறியவேண்டும்** என்பதல்ல அதன் அர்த்தம். நீ நரகத்துக்கு போகாமல் இருக்க உன் ஆவிக்குறிய ஜீவியத்துக்கு இடலாயிருக்கும் எதையும் இழக்க தயாராக இருக்கவேண்டும் என்பதாகும். ஒரு பாவத்தை நாம் ஒத்தை கண்ணால் பார்ப்பதில்லையே! இரண்டு கண்களால்தான் பார்க்கிறோம். ஆகவே நேரிடையாக அர்த்தம் கொண்டால் உலகத்தில் பலருக்கு கண்களே இருக்காது. ஆகவே இதன் **ஆவிக்குறிய அர்த்தம்** மட்டும் எடுக்கவேண்டும்.

அதுபோலவே சபையில் **பெண்கள் பேசக்கூடாது** என்ற வசனம் **பெண்கள் முக்காடு** இடுவதைக்குறித்த வசனம் இவைகளைப்பற்றி அறியுமுன் முதலில் **யூத கலாச்சாரத்தின்** அடிப்படையில் அர்த்தம் கண்டுபிடிக்கவேண்டும். அது யூத **கலாச்சாரமானாலும்,** ரோமர் கால **கலாச்சாரமானாலும்** அது நம் **ஆத்துமாவுக்கு நலமானது** என்று தோன்றினால் அதில் **கர்த்தருக்கு பிரியமானதை** மட்டும் நாம் **கைக்கொள்ளவேண்டும்.**

## பெந்தேகோஸ்தே சபையினர் குழப்பும் வசனம்:

1 கொரி 14:1,2 வசனங்களை கூறிதான் **பெந்தேகோஸ்தே** சபையினர் **அன்னிய பாஷை** பேசுவதற்கு **அர்த்தம் சொல்ல** வேண்டுவதில்லை என்று உபதேசிக்கிறார்கள். இந்த வசனத்தை கூறி நம் வாயை அடைத்துவிடுவார்கள். இங்கு கூறப்பட்ட **அன்னிய பாஷைக்கு அர்த்தம் கேட்க கூடாது** என்று எழுதியிருப்பதால் நாங்கள் பேசும் அன்னிய பாஷைக்கும் **அர்த்தம் இல்லை** என்பார்கள். இது ஜனங்களை இவர்கள் **ஏமாற்ற** உபயோகிக்கும் மிக முக்கிய வசனமாகும். இந்த வசனத்தின் **அர்த்தம் பாஸ்டருக்கே** தெரியாது. காரணம் அவருக்கு **சொல்லிக் கொடுத்தவர்கள்** அந்த வசனத்தின் சூழ்நிலையை **மறைத்திருப்பார்கள்.**

நான் இக்கட்டுரையின் ஆரம்பத்தில் வசனத்தை எப்படி அர்த்தம் கொள்ளவேண்டும் என்று எழுதினேனோ அதன்படி இந்த வசனத்தின் அர்த்தத்தை விளங்கிகொள்ள நீங்கள் அறிய வேண்டிய விவரம் அந்த குறிப்பிட்ட வசனம் எழுதப்பட்ட அந்த நிருபம் (கடிதம்)

- ☐ யாரால் எழுதப்பட்டது ?
- ☐ யாருக்கு எழுதப்பட்டது ?
- ☐ அனைத்து சபைகளுக்காகவும் எழுதப்பட்ட கடிதமா?
- ☐ அனைத்து சபைகளும் கைக்கொள்ள வேண்டிய விஷயமா?
- ☐ வேதத்தில் உள்ள மற்ற சபைகளுக்கு பவுல் கடிதம் எழுதும்போது **அன்னிய பாஷையை** குறித்து ஒரு வார்த்தையையாவது எந்த நிரூபத்தலும் குறிப்பிடவிலையே ஏன் ?
- ☐ **ஜெபம் செய்யும்போது** என்று அந்த வசனத்தில் பவுல் குறிப்பிடுவது ஒருவன் தன் **தனி ஜெபத்தில்** பேசும் ஜெபமா? **சபை நடக்கும்போது** சபை ஆராதனையில் செய்யபட்ட ஜெபமா? என்று அறிய வேண்டியது அவசியம்.

மேலே எழுதப்பட்ட கேள்விகளுக்கு பதிலை தியானித்துப்பாருங்கள். அதே அதிகாரத்தில் 1கொரி.14:4**அன்னிய பாஷையில்** பேசுகிறவனைப்பற்றியும் **தீர்க்கதரிசனம்** சொல்லுகிறவனைப்

பற்றியும் பவுல் குறிப்பிடுவது **ஒரு குறிப்பிட்ட சபைக்காக** மட்டுமே அந்த **வசனத்திதை** எழுதுகிறார். ஆகவே இது **கொரிந்து பட்டணத்து சபை** ஆராதனை வேளையில் நடப்பதைக்குறித்து எழுதுகிறார் என்பதை முதலில் விளங்கிக்கொள்ளவேண்டும். மேலும் அந்த சபையில் பாஷையால் ஏற்பட்ட பல பிரச்சனைகளைக்குறித்து பவுல் கேள்விபட்டதால்தான் அந்த நிருபத்தை அவர் எழுதுகிறார் என்பதை மனதில்கொண்டு அதன்பின் இதன் சரியான அர்த்தத்தை நாம் புரிந்துக்கொண்டால் நிச்சயம் **அன்னிய பாஷைப்பற்றி** குழப்பமே வராது.

இதைக்குறித்தும் மற்ற **முக்கிய சம்பவங்கள்** பற்றியும் கடைசி பகுதியில் விவரிக்கிறேன். இப்போது அடிப்படையில் ஒரு வசனத்தை எப்படி அர்த்தம் கொள்வது என்பதற்காக மட்டுமே இதை குறிப்பிட்டேன்.

- ☐ **இனி அன்னிய பாஷை உண்டா?**
- ☐ **அன்னிய பாஷை பேசலாமா?**
- ☐ பரிசுத்த ஆவியானவர் நிறைவுக்கு **வெளிஅடையாளமாக** அன்னிய பாஷை கொடுக்கப்பட்டதா?
- ☐ அன்னிய பாஷை வேண்டும் என்று கேட்டு ஜெபிக்கலாமா?
- ☐ பரிசுத்தாவியானவரின் நிறைவை நாம் எப்படி பெறுவது ?
- ☐ பரிசுத்தஆவியானவரை நோக்கி எங்களை பரிசுத்த ஆவியினால் நிறையும் எனறு ஜெபிக்கலாமா? **பரிசுத்த ஆவியானவரே வாரும்** என்று சபை மக்களாக பாஸ்டரோடு சேர்ந்து பரிசுத்தாவியான வரை அழைக்கலாமா? ஆவியானவரை நோக்கி வேண்டுதல் செய்யலாமா?
- ☐ பரிசுத்த ஆவியானவரின் நிறைவை நமக்கு கொடுக்கும் அதிகாரம் யாருக்கு கொடுக்கப்பட்டுள்ளது.
- ☐ ஆவியானவருக்கு அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதா?
- ☐ **ஆவியானவரிடமே** என்னை நிறையும் என்று **விண்ணப்பிக்கலாமா?**

இப்படி பலரை குழப்பும் இப்படிப்பட்ட முக்கியமான கேள்விகளுக்கு பதில் பெரும்முன் **பரிசுத்தாவியானவரைப்**பற்றியும் **அவரின் வரவைப்பற்றியும் புதிய ஏற்பாட்டு சபையின்** ஆரம்பம்பற்றியும் நாம் பார்க்கப்போகிறோம். **உலக ஆரம்ப முதல்** நடந்த விஷயங்களையும் **சரித்திர பின்னணியையும்** நாம் அறிய வேண்டியது மிக அவசியமாகும்.

## முதலாவது பாஷையின் ஆரம்பம் குறித்து ஆராய்வோம்

உலக ஆரம்பத்தில் **பூமியெங்கும் ஒரே பாஷையும்** ஒரேவிதமான பேச்சும் இருந்தது. ஆதி 11:1

ஆதியிலே கர்த்தர் ஆதாம் - ஏவாள் இருவரை மட்டுமே படைத்தார். அப்போது அவர்கள் **கர்த்தரோடு பேசினார்கள்** என்று வாசிக்கிறோம். **என்ன பாஷையில்** கர்த்தரோடு பேசினார்களா? என்பதைக்குறித்து நமக்கு அறிவிக்கப்படவில்லை. ஆனால் அன்று அவர்கள் ஆண்டவர் சாப்பிடக்கூடாது என்று கட்டளையிட்ட மரத்தின் பழத்தை சாப்பிட்டதால் தேவ கோபம் ஏற்பட்டது. அதனால் **தேவமகிமையை** இழந்தார்கள். அதுவரை கர்த்தரோடு ஏதேன் தோட்டத்தில் உலாவும்போது **தேவமகிமையின்** சம்பாஷனையில் பேசியிருக்கலாம். **அந்த சம்பாஷனை எப்படி இருந்திருக்குமோ நமக்கு தெரியாது.** பரலோகத்தில் கர்த்தரால் **வேலைக்காரனாக**

உண்டாக்கப்பட்ட மூன்று தூதர்களில் வர்களில் ஒருவன்தான் **லூசிபர்** அவன்தான் தேவனால் தள்ளப்பட்ட தூதன் எனப்படுகிறவன். அவன் தன் மகிமையை இழந்தாலும் தேவனுக்கு எதிராக செயல்பட்டதாலும் பிசாசாக அழைக்கப்பட்டான். அவன் பரலோகத்தில் இருந்தபடியால் பிசாசு ஆகும். ஆகையால் அந்த **மகிமையின் சம்பாஷனை** அவனுக்கும் தெரியும். அந்த சம்பாஷனையில்தான் பிசாசு **ஏவளோடு** பேசியிருக்கமுடியும் என்று யூகிக்கலாம். ஆனால் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியே தள்ளப்பட்டபின் அவர்கள் **என்ன பாஷையில்** பேசியிருப்பார்கள் என்கிற கேள்வி உண்டாகிறது. அது நமக்கு வேதத்தில் அறிவிக்கப்படவில்லை.

- உலக **விஞ்ஞானிகளின்** ஆராய்ச்சியின்படி கற்கால மனிதர்கள் **ஒலியின்** மூலமாக பேசிக்கெண்டார்கள் என்றும் வார்த்தைகளுக்கு ஒவ்வொருவிதமான **சப்தங்கள்** உண்டாக்கி அந்த ஒலி மூலமாக **அர்த்தத்தை** விளங்கிக்கொண்டு ஒருவருக்கொருவர் பழக தொடங்கினார்கள். சில வருடங்களுக்குமுன்பு வரை நம் நாட்டில் அவசர செய்திகளை **தந்தி** (Telegram) மூலமாக அனுப்பினார்கள். மறுபக்கம் உள்ள தந்தி அலுவலர் தந்தியின் **சப்தங்களுக்கான** வார்த்தைகளின் அர்த்தம் கண்டுபிடித்து ABCD என்ற ஆங்கில எழுத்தை அந்த **சப்தத்துக்கு** அமைத்து அதை **தொகுத்து ஒரு வார்த்தையாக்கி** செய்திகளை அனுப்பியதை நாம் அறிவோம்.

அந்த முறையில்தான் கற்கால மனிதர்களும் **மரத்தை அல்லது கற்களை தட்டி** ஒலி உண்டாக்கி அதில் விதவிதமான **சப்தம் உண்டாக்கி** எப்படி அன்று ஒருவருக்கொருவர் பழகினார்களோ அந்த கற்கால மனிதர்களின் **ஒலி பாஷையை** மாதிரியாக வைத்துதான் தந்தி வழி செய்திகளை **கடகட கட்டு** என்ற சப்த வித்தியாசத்தின் மூலம் வார்த்தை கண்டுபிடித்து செய்திகள் அனுப்பும் ஏற்பாட்டை **மார்கோனி** என்ற விஞ்ஞானி கண்டுபிடித்தார்.

**ஒலிமூலம்** வார்த்தைகள் அமைக்க **பழகும்முன்** கற்கால மனிதர்கள் விதவிதமான **செய்கைகள்**மூலம் ஒருவருக்கொருவர் பேசி பழகினார்கள். அந்த முறையை பின்பற்றி **செய்கைகள்** மூலம் **செவிகேளாதோர்** பள்ளியில் பிள்ளைகளுக்கு சொல்லி கொடுப்பதைபோல் ஆதாமும்,ஏவாளும் **செய்கைகள்மூலம்** ஒருவருக்கொருவர் பழகியிருக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது.


விஞ்ஞானிகளின் ஆராய்ச்சி கூறுவதைபோல் **ஒலிகள், செய்கைகள்** இவைகளை இணைத்து அவற்றிக்கு **வார்த்தைகளை** கொடுத்து **வாய்வழி சப்தம்** கொண்டு பேசியிருக்கலாம். அது ப**ரிணாம வளர்ச்சியுற்று பாஷையாக** உருவெடுத்திருக்கலாம் என்று அறியப்படுகிறது.

நம் வேதத்தில் கூறியபடி ஆதாம் - ஏவாளுக்கு பின் மக்கள் பலுகி பெருகினார்கள் என்று தொடர்ந்துள்ள அதிகாரங்களில் வாசித்து அறிகிறோம். எப்படியோ **ஒரே ஒரு பாஷையில் மட்டும்** மக்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். அந்த ஒரே பாஷை என்ற தேவ திட்டத்தை கெடுக்கும் வகையில் ஆதி 11:1-9ல் வாசித்தபடி அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் **தங்கள் மகிமைக்காக** (தேவ மகிமைக்காக அல்ல என்பதை கவனிக்கவேண்டும்.) வானம் எட்டும் அளவு ஒரு கோபுரம் பணிய ஆரம்பித்தார்கள். அன்று கர்த்தர் பூமியில் இறங்கி வந்து அவர்களின் தேவையற்ற அந்த வீனாண வேலையை நேரில்கண்டு மிகுந்த கோபம் கொண்டவரானார் என்று வாசிக்கிறோம்.

# மனிதனைக்குறித்த தேவனின் ஆரம்ப திட்டம்


கர்த்தர் **ஆதாம்** - ஏவாள் மூலம் **மனித வர்க்கத்தை** பூமியில் உண்டாக்கியதின் நோக்கம் அவர்கள் பலுகி பெருகி உலகமெங்கும் சென்று வாழ்ந்து அவர்கள் மூலம் **தெய்வசந்ததி** உண்டாக்கி அவர்கள் **தன்னை மட்டும் வணங்கி, யெகொவாகிய தன்னை** துதித்து தன்னை **மகிமைப்படுத்தவேண்டும்** என்பதே **கர்த்தரின் திட்டமாக** இருந்தது. அதனால்தான் மனிதனை சிருஷ்டித்தபோது நீங்கள் பலுகி பெருகி **பூமியை நிரப்புங்கள்** என்றார். காரணம் **பூமி கர்த்தருடைய மகிமையை** அறிகிற அறிவினால் **நிறைந்திருக்கட்டும்.** ஆதி. 1:28 என்பதே தேவனின் நோக்கமாயிருந்தது.

ஆனால் இந்த மனிதர்களோ **பூமியெங்கும்** பரவி செல்லவோ, **பூமி முழுவதும்** தன்னை சேவிக்கும் **மக்களால் நிறப்பும் எண்ணமோ** இல்லாமல் தேவ திட்டத்தை மீறி மறுபடியும் கீழ்படியாமல் ஒரே **இடத்தில் தங்கி வாழ முற்பட்டார்கள்.** கர்த்தர் சொன்ன வார்த்தைக்கு **நேர்மாறாக நடந்துகொண்டார்கள். மேலும் அவர்கள் கூறியதாவது,** இப்படி கூறினார்கள். "**நாம் பூமியெங்கும் சிதறிப்போகாதபடி** நமக்கு ஒரு **நகரத்தையும்,** வானத்தை எட்டும் சிகரமுள்ள ஒரு **கோபுரத்தை** கட்டுவோம்" என்றார்கள்.(ஆதி. 11:1-9) இது **தேவ திட்டத்தை முறித்துப்போட்ட செய்கையாகும்.** ஆகவேதான் கர்த்தர் அவர்கள் பேசிய **ஒரே மொழி** என்ற **பாஷையில்** குழப்பத்தை உண்டாக்கி அவரவர்கள் பேசிய பாஷையின்படி அவர்களை அந்த **இடத்திலிருந்து கர்த்தரே**அவர்களை **பூமியின் மீதெங்கும் சிதறிப்போகச் செய்தார்.** ஆதி 11:9



யார் யார் என்னன்ன **பாஷை** பேசினார்களோ அவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து பூமியின் **கடைசி பரியந்தம்** ஆங்காங்கே **சிதறிபோய்** குடியேறி வாழ்க்கையை தொடங்கினார்கள்.

கர்த்தர் **ஆதாம் - ஏவாளை** சிருஷ்டித்து அவர்களை **ஏதேன் தோட்டத்துக்கு** வெளியே தள்ளியபின் அவர்கள் மூலமாக ஜனங்கள் **பலுகிபெருகினார்கள்.** அந்த ஆரம்ப காலங்களிலேயே மக்கள் தங்களை படைத்தவரை மறந்து பாவ வாழ்க்கையில் வாழ்ந்து கடவுளின் பொறுமையின் எல்லைக்குமேல் பாவம் செய்து கர்த்தரை வேதனைப்படுத்தி வாழ்ந்தார்கள். ஒரு கட்டத்தில் **மனுஷர்களை ஏன்தான் படைத்தோமோ** என்று கர்த்தர் மிகவும் வேதனைப்பட்டதாக ஆதி 6:6ல் பார்க்கிறோம். அதன்பின் பாவம் எல்லை மீறிப்போனவுடன் மனித சமூகத்தினமேல் கர்த்தர் வெருப்புகொண்டு தான் படைத்த முழு உலகத்தையும் அதில் உள்ள மக்களையும் அழித்துவிட ஏற்பாடு செய்தார் பெரும் மழையையும் **பெரும் வெள்ளத்தையும்** உண்டாக்கி **முழு உலகத்தையும்** வெள்ளத்துக்குள் **மூழ்கடித்தார்** என்றாலும் இரக்கம் உள்ள கர்த்தர் அந்த ஜன கூட்டத்திலும் தன்னை **உண்மையாய் நேசித்து** பாவத்தில் விழாதபடி விக்கிரகத்தை **ஆராதிக்காத குடும்பமான நோவாவின் குடும்பத்தை மட்டும்** உயிரோடு காப்பாற்ற சித்தம்கொண்டு நோவாவிக்கு ஒரு **பேழையை** உண்டாக்கச் சொல்லி நோவாவோடு தான் உண்டாக்கின **அனைத்து வகையான மிருகங்களிலும்** ஒவ்வொரு ஜோடி மிருகங்களையும்



காப்பாற்ற நோவாவிடம் **ஒரு பேழையை** உண்டாக்க சொல்லி அதன் மூலம் **அவர்களை மட்டும் கர்த்தர்** காப்பாற்றினார். உலகத்தில் **மலையோ மரமோ** கண்களில் தெரியாத வண்ணம் முழு உலகத்தையும் **வெள்ளத்தால் மூழ்கடித்தார்.** இதுதான் உலகத்துக்கு வந்த முதல் **மிகப் பெரிய அழிவு** ஆகும்.

அதன்பின் நோவா குடும்பம் மூலமாக ஜனங்கள் மறுபடியும் **பலுகிபெருகினார்கள்.** மறுபடியும் அவர்கள் தங்களுக்கு கேடு உண்டாக்கி கட்டுபாடற்ற வாழ்க்கை வாழ்ந்து மக்கள் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டார்கள். கர்த்தரை தொடர்ந்து வேதனைப்படுத்தினார்கள். ஆகவே கர்த்தரே தான் நேசித்த மக்களை பார்வோனிடம் அடிமைகளாக வாழ ஒப்புக்கொடுத்தார். பல வருடங்கள் அடிமைகளாக கஷ்டப்பட்ட மக்கள் மனம் திரும்பி கர்த்தரிடம் மன்னிப்பு கேட்டு தங்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க கெஞ்ஜினார்கள். கர்த்தர் மோசே மூலமாக அவர்களை விடுவித்து **கானான் தேசத்தில் வாழ வைக்க** பார்வோனிடமிருந்து (எகிப்திலிருந்து) விடுவித்து கானானுக்கு கொண்டுபோனார். இதன் விவரங்களையும் மற்ற சம்பவங்களையும் வேதத்தில் யாத்திரையாகமம் என்ற பகுதியில் வாசித்து அறியலாம். மோசே மரித்தபின் யோசுவா என்பவர் மூலமாக மக்களை வழி நடத்தினார். அதன்பின் நடந்த விவரங்களை தொடர்ந்து வாசித்து அறியலாம்.

## நியாதிபதிகள் காலம்:

**யோசுவா** உயிரோடு இருக்கிற வரை அவன் மக்களை வழிநடத்தினான். ஆனால் யோசுவா 110வயது ஆனவுடன் மரித்துப்போனான். மக்கள் மேலும் மேலும் பாவம் செய்து **பாகால்** என்னும் **விக்கிரகத்தை** உண்டாக்கி அதை சேவிக்க தொடங்கினார்கள். பிரச்சனைகள் பெருகினது.

இந்த சூழ்நிலையில்தான் கர்த்தர் தன் மக்களை **நியாயம் விசாரித்து மக்களை** சரியான பாதையில் வழிநடத்த கர்த்தர் **நியாதிபதிகளை** எழுப்பினார் என்று வேதம் சொல்கிறது. நியா. 20:16. அதிலிருந்து ஆரம்பித்ததுதான் **நியாதிபதிகளின் காலம்.** ஆனால் சில காலத்துக்குள்ளாகவே மக்கள் மறுபடியும் தங்கள் இஷ்டம்போல ஜீவித்தார்கள். நியாதிபதிகளும் மக்கள் செய்த அதே பாவத்தை செய்து **பாகால்** விக்கிரகத்தை சேவிக்க தொடங்கினார்கள்.

வேதம் கூறுகிறது. அந்நாட்களில்... **அவனவன் தன் தன் பார்வைக்குச் சரிபோனபடி செய்து வந்தார்கள்** என்று வேதம் கூறுகிறது. நியா 21:25

## இராஜாக்கள் காலம்:

உலகம் தொடங்கின காலம் தொட்டே இரண்டுவித **இனங்கள்** வாழ்ந்து வந்தார்கள். **(ஜாதிகள் என்பது உலகத்தில் எங்கும் இல்லை.)** ஒரு இனம் **யெகோவாவை மட்டும்** சேவிக்கும் கூட்டம். மற்ற **இனங்களெல்லாம்** விதவிதமான **விக்கிரகங்களை** தங்களுக்கென்று அவர்களே உண்டாக்கி வணங்கி வந்தார்கள்.

கர்த்தர் **யூதர்களையும் இஸ்ரவேல் மக்களையும்** நேசித்து அவர்களுக்கு எல்லாவற்றிலும் **முன்னுரிமை** கொடுக்க காரணம் என்னவென்றால் அவர்கள் **விக்கிரகத்தை வணங்காமல்**

யெகோவாவை மட்டுமே **சேவித்தார்கள்** அதனால் கர்த்தர் யூதர்களை - இஸ்ரவேலரை **என் ஜனம், என் மக்கள்** என்று உரிமையோடு அழைப்பார். அப்படி கர்த்தர் அவர்களை நேசித்து அவர்களை கிருபையாக வழிநடத்தினார் என்றாலும், அவர்களுக்கு **செழிப்பும்,** சமாதானமும் பெருகும்போது **தேவனை மறப்பது வழக்கமானது.** மறுபடியும் **விக்கிரக ஆராதனையின்** பக்கம் சேர ஆரம்பித்தனர். அவர்கள்மேல் கோபம் கொண்ட கர்த்தர் அவர்கள் **உணர்த்தப்பட மனம்திரும்ப** கர்த்தரே **சத்துருக்கள் கையில்** தன் மக்களை ஒப்பிவிப்பார். **பெலிஸ்தர்** என்ற எதிரிகள் கையில் ஒப்புகொடுப்பார். மக்கள் மனம்திரும்பியவுடன் அவர்களை கர்த்தரே **காப்பாற்றி** விடுவித்து நடத்திவந்தார்.

இந்த சூழ்நிலையில்தான் வேண்டும் என்ற மக்களின் பிடிவாத வேண்டுகோள்படி **கர்த்தர் இராஜாக்களை** நியமித்தார். வேதத்தில் **பல ராஜாக்கள்** இஸ்ரவேல் மக்களை பற்பல காலங்களில் வழிநடத்தியதும், **இராஜாவே** தேவ ஆலோனையை கேட்காமல் மக்களோடு பாவம் செய்து சோரம்போன வரலாறுகளை இராஜாக்களின் புஸ்தகத்தில் வாசித்திருப்பீர்கள்.

## தீர்க்கதரிசிகளின காலம்:

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் கர்த்தர் அடிக்கடி **தீர்க்கதரிசிகளை** எழுப்பி இராஜாக்களையும், மக்களையும் எச்சரித்துப் பார்த்தார். **இராஜாக்களும், மக்களும்** மறுபடியும் கர்த்தர் செய்த அற்புதங்களையும் அடிமைத்தனத்தில் விடுவித்து வழி நடத்தியதையும், பாலும் தேனும் ஓடும் கானான் தேசத்தில் தான் வாக்களித்தபடி கொண்டுவந்த சேர்த்து வாழ வைத்ததையும் அடிக்கடி மறந்து முரட்டாட்டம் பிடித்தவர்களாக வாழ்ந்தார்கள். இதற்குமேல் இந்த மக்களோடு எத்ததைன காலம் சகிப்பது முடிவாக **கர்த்தரின் கோபம்** மக்கள்மேல் பற்றி எரிந்தது. முதல்முறை முழு உலகத்தையும் **தண்ணீரில்** மூழ்கடித்து அழித்ததைபோல இம்முறை **அக்கினியினால்** உலகத்தை அழிக்க தீர்மானித்தார். இதுதான் உலகத்தில் **கடைசி அழிவு.** அதன்பின் உலகம் இருக்காது.

இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவன் தான் ஆசையாய் **சிருஷ்டித்த மக்களை**தானே அழிப்பது எப்படி? தான் உண்டாக்கின மனிதர்களை **பரலோகத்தில்** தன்னோடுகூட அழைத்து சென்று தன்னோடு வைத்துக்கொள்ள விரும்பினார். அவர் ஆசையின்படிதான் தான் உண்டாக்கிய மானுடரை **பரலோகம்** அழைத்து செல்ல விரும்பினார்.

தெய்வ திட்டத்தின்படி பரிசுத்த **பரலோகத்தில்** பாவம் **மன்னிக்கப்படாமல்** பாவம் கழுவப்படாமல் ஒருவரும் பரலோகம் போகமுடியாது. அதற்காக ஆண்டவர் ஏற்பாடு செய்த திட்டம்தான் **பரிசுத்த இரத்தத்தினால்** பாவம் கழுவப்படுவது என்பதாகும். (லேவி. 17:11, எபி. 9:2) ன்படி **இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மண்ணிப்பு கிடையாது.**

**தேவன் ஒருவர் தவிர பரிசுத்தர்** யாரும் இல்லை என்று வேதம் கூறுகிறது. அப்படியானால் பரிசுத்த **தெய்வமே பூமியில்வந்து** தன் இரத்தத்தை சிந்தி **மக்களின் மீட்புக்கு** வழி உண்டாக்க வேண்டும். அதன்படிதான் திரியேக தேவனில் ஒருவரான **மேசியாவை** மனுஷனாக கன்னி மரியாளிடத்தில் **புருஷதொடர்பு** இல்லாமல் **பரிசுத்த ஆவியானவரின்** கிரியையால் **கர்ப்பம் உண்டாக்கி** மனுஷனாய் **சாவதற்கென்றே** இயேசு கிறிஸ்து பிறந்தார்.

இது தேவன் **மனிதர்மேல்** வைத்த பெரிய கிருபையாகும். இஸ்ரவேல் மக்களின் முரட்டாட்டம் எல்லை மீறியதால் உலகை **அக்கினியால்** அழிக்க திட்டமிட்டு அழிவுக்கு முன் இஸ்ரவேல் மக்களுக்கு இரட்சிக்கப்பட்ட, **பாவம் கழுவப்பட** கடைசி சந்தர்ப்பமாக **மேசியா** பிறக்கப்போவதை **ஏசாயா** தீர்க்கதரிசி மூலம் முன் அறிவித்தார். பிதா செய்த இந்த ஏற்பாட்டின்படி **பிதா அனுப்பும்** மேசியாவை **நீங்கள் ஏற்றுக்கொண்டு** அவர் கூறுவதற்கு **கீழ்படிந்தால்** இரட்சிக்கப்படுவீர்கள். இது உலக மக்களுக்கு கர்த்தர் கொடுத்த கடைசி சந்தர்ப்பம் என்றார்.


பிறப்பவர் பிதா அனுப்பிய மேசியாதான் என்பதை நாங்கள் எப்படி அறிந்துக்கொள்வது என்றார்கள். ஏசா. 14:7ல் **கன்னிகை ஒருவள் கற்பவதியாவாள்.** இதுவே **உங்களுக்கு கொடுக்கபட்ட அடையாளம்** என்றார். யோவான் 3:16ன்படி இப்படி பிதா தன் ஒரே மகனுக்கு சமமான **மேசியாவை** கொலை செய்ய ஒப்புக்கொடுத்து இவ்வளவாக உலகத்தை அன்பு கூர்ந்தார் என்று வேத புஸ்தகம் கூறுகிறது.

# இயேசு கிறிஸ்துவின் வரவு

**மேசியா பிறந்தார்.** இயேசு என்ற பெயரிலும் **இம்மானுவேல்** என்று பிதா வைத்த **பேரிலும்** வளர்ந்தார். பிதாவின் திட்டம் முழுவதையும் **தேவஇராஜ்யத்தைப் பற்றியும் உபதேசித்தார்.** மனிதன் வாழவேண்டிய விதத்தை **தானே வாழ்ந்து காட்டினார்,** பிதா கூறியதை **சகலத்தையும்** உபதேசித்தார். அற்புதங்களையும், **அடையாளங்களையும்** செய்தார். **குஷ்டரோகிகளை** சுகமாக்கினார். **மரித்தவர்களை உயிரோடு எழுப்பி** தான் யார் என்பதையும் **தான் வந்த நோக்கத்தையும்** விளக்கினார்.

தான் **கொல்லப்படபோகிறோம்** என்பதை முன்பதாக அறிந்ததால் தன் **புது உபதேசத்தை உலகெங்கும்** பரப்ப சீஷர்களை தெரிந்தெடுத்தார்.

மிக முக்கியமாக **சபையை கட்டுவேன்** என்று ஏற்கனவே கூறியபடி அதன் உபதேசங்களையெல்லாம் தன் சீஷர்கள் மூலமாக அறிவித்து வைத்திருந்தார். தான் மரிக்கும் முன் இயேசு கூறியதாவது தான் மரித்து பரலோகத்துக்கு சென்றபின் **திரியேக தெய்வத்தில்** மற்றொரு **நபரானவரும்** மற்றோரு **தேற்றவாளனுமான பரிசுத்த ஆவியானவரை** நம்மோடு **நமக்குள்** என்றென்றும் **வாசம் செய்ய** தான் பரமேறி சென்றஉடன் **அனுப்புவதாக** கூறியபடியே **ஆவியானவரை** அனுப்பினார்.



இப்படி திருசபை மக்கள் பரிசுத்தஆவியானவரால் நிரப்பப்படும் ஏற்பாட்டை இயேசு கிறிஸ்து பிறக்கும்முன்பே பிதா யோவேல் தீர்க்கதரிசிமூலம் **முன்அறிவித்தப்படியே** சம்பவிக்கவும் செய்தார். **மாம்சமான யாவர் மேலும்** என் ஆவியை ஊற்றுவேன் என்று யோவேல். 2:28,29 என்று தீர்க்கதரிசி கூறிய வசனத்தின்படியே நிறைவேறியது.

# பரிசுத்த ஆவியானவரின் முதல் இறக்கம்

ஏற்கனவே நீங்கள் வாசித்தபடி **அக்கினியினால்** பூமியை கர்த்தர் அழிக்குமுன் **மக்கள் பாவம் கழுவப்பட** கடைசி சந்தர்ப்பமாக திரியேக தெய்வத்தின் ஒருவரான இயேசு கிறிஸ்துவை **மேசியாவாக** இந்த பூமியில் **கொல்லப்படுவதற்கென்றே** உலக மக்களுக்காக பாவ பரிகாரியாக **சிலுவையில் அறையப்பட்டு** மனிதர் அனுபவிக்கவேண்டிய **தண்டனையைத்** தான் ஏற்று இரத்தம் சிந்தவேண்டும் என்ற பிதாவின் திட்டப்படி **இயேசுகிறிஸ்து இரத்தம் சிந்தி மரித்தார்.** இயேசுகிறிஸ்துவை மேசியாவாக பூமிக்கு அனுப்ப போகும் விஷயத்தை மக்களுக்கு ஏசாயா தீர்க்கதரிசி மூலம் அறிவிப்பு கொடுத்தார். கடைசி அழிவிலிருந்து **இஸ்ரவேலர்** (யூதர்கள்) காப்பாற்றப்பட இறக்கமுள்ள தேவன் **கடைசி சந்தர்ப்பத்தை** அறிவித்தார். இந்த சந்தர்ப்பத்தை நீங்கள் உபயோகித்து பிதா அனுப்பும் மேசியாவை **கிறிஸ்து** என்று ஏற்றுக்கொண்டு அவர் வார்த்தைக்கு கீழ்படியவேண்டும் என்றார்.

கடைசி சந்தர்ப்பமாக **பிதா** அனுப்பும் **மேசியாவை** நாங்கள் எப்படி அடையாளம் காண்பது என்ற கேள்விக்கு ஏசா. 14:7ல் **கன்னிகை கர்ப்பவதியாவாள்** இதுவே **உங்களுக்கு அடையாளம் என்றார்.**

❖ மேசியா **இயேசுகிறிஸ்துவாக** கன்னி மரியாள் மூலம் **பிறந்துவிட்டார்.** அவர் வளர்ந்தார். தனது 30வது வயதில் ஆலயத்தில் தன் பிரசங்கத்தில் **பிதாவின் திட்டத்தின்படி** அனுப்பப்பட்ட மேசியா நான்தான் என்று மறைமுகமாக கூறினார். ஆனால் பிரதான ஆசாரியரும்,மற்ற யூதர்களும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதன்பின் அதற்கு **ஆதாரமாகவும்,** அடையாளமாகவும் அவர் மூலமாக **பல்வேறு அற்புதங்கள்** நடைபெற்றது. **மரித்தவர்கள் உயிரோடு** எழுப்பப்பட்டார்கள். அன்பின் புது உபதேசத்தை அறிவித்தார். என்றாலும் **யூதர்கள்** அவரை **மேசியாவாக** ஏற்றுக்கொள்ளவும் அவர் உபதேசத்தை கைகொள்ளவும் விரும்பவில்லை. இயேசு அவர்களோடு கூறும்போது நான் அறிவிக்கவேண்டியதை அறிவித்துவிட்டேன். **ஏற்றுக்கொள்கிறவர்கள்** ஏற்றுக்கொள்ளலாம் என்று கூறி தனக்கு நேரப்போகும் மரண **தண்டனையும்,மரணத்தையும்** மூன்றாம்நாள் **உயிரோடு எழப்போவதையும்** முன் அறிவித்தார். அதன்பின் **பரலோகம்** சென்றுவிடுவதாகவும் அறிவித்தார்.

☐ இயேசுவின் அறிவிப்பில் மிக முக்கியமானது **சபையை கட்டுவேன்** என்பதாகும். அந்த சபையின் சட்ட திட்டத்துக்கு கீழ்படிந்து **சாட்சியுடன் வாழ்பவர்களைத்தான்** இயேசு பரலோகத்துக்கு தன்னோடு அழைத்து செல்ல **இரண்டாவதுமுறை** இந்த பூமிக்கு வரப்போவதாக அறிவித்தார். அதைத்தான் **இயேசுவின் இரண்டாம் வருகை** என்று வேதம் கூறுகிறது. **சபைக்குள் இரட்சிக்கப்பட்ட அனுபவத்தோடு இருப்பவர்களைமட்டும்தான்** இரண்டாம் வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

ஆகவேதான் இயேசுகிறிஸ்து பூமியில் இருந்து பரலோகத்துக்கு புறப்பட்டு போகும்முன்

சீஷர்களை நோக்கி சொன்னதாவது. **நீங்கள் புறப்பட்டு போய் சகல ஜனங்களையும் எனக்கு சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்தாவியின்** நாமத்தில் **ஞானஸ்நானம் கொடுங்கள்** என்று கட்டளையிட்டார். அப்படி ஆத்துமாக்களை தேடி செல்வதற்குமுன் சீஷர்களுக்கு இயேசு **சகல அதிகாரங்களையும் கொடுத்தார்.** மேலும் உலகமுழுவதும் **நற்செய்தியை** அறிவிக்கும்முன் இயேசு **தாம் வாக்களித்த பரிசுத்தஆவியினால்** நீங்கள் நிறைக்கப்படும் வரை நீங்கள் எந்த ஊழியத்தையும் செய்யக்கூடாது. **எருசலேம் சென்று ஜெபத்தில் காத்திருங்கள்** என்று கட்டளையிட்டு **பரலோகம் சென்றுவிட்டார்.**

இயேசு தெரிந்தெடுத்த **12 சீஷர்களுடன்** மற்ற சீஷர்களுமாக மொத்தம் 120பேர் எருசலேமில் ஒரு வீட்டின் **மேல்அறையில்** ஜெபத்தில் **பரிசுத்தஆவியானவரின் இறக்கத்திற்காக காத்திருந்தனர்.**

## பெந்தேகோஸ்தேயின் நாள்:

**பெந்தேகோஸ்தே** என்பது எந்த ஒரு **சபையினுடைய பெயர் அல்ல.** யூதர்கள் வருடம் ஒருமுறை கொண்டாடும் **பஸ்கா** பண்டிகையின் **50-வது நாளுக்கு** பெயர்தான் **பெந்தேகோஸ்தே நாள்** எனப்படுகிறது.

**யூதர்களுக்கு பஸ்கா பண்டிகை** என்பது **மிக முக்கியமான பண்டிகை ஆகும்.** அந்த குறிப்பிட்ட நாளில் **பண்டிகை** கொண்டாடி **கர்த்தரை ஆராதிக்க** உலகின் சகல பாகங்களிலிருந்தும் மக்கள் எருசலேம் வந்து சேருவார்கள். **அன்று பாபேல் கோபுரம்** பணியும்போது கர்த்தர் கோபம்கொண்டு, ஒரே **ஒரு பாஷையில்** பேசிக்கொண்டிருந்த **யூத** மக்களை **பற்பல பாஷைகளை பேச வைத்ததால்** யூதர்கள் குழம்பிபோய் உலகின் நாலா பாகங்களில் **சிதறடிக்கப்பட்டார்களே !** அந்த மக்கள் உலகின் எத்தனை தூரத்தில் சென்று குடியமர்ந்து வாழ்ந்துகொண்டிருந்தாலும் **வருடம்** ஒருமுறை **பஸ்கா பண்டிகையன்று** மாத்திரம் கூட்டம் கூட்டமாய் **எருசலேம் நகருக்கு** வந்து சேர்ந்துவிடுவார்கள். அவர்களோடு எருசலேமில் உள்ள யூதர்களும் மற்ற இடங்களிலிருந்து வந்து மக்களும் அங்கு வந்து சேருவார்கள்.

**அன்று நடந்த நான்கு முக்கிய சம்பவங்களும் - அதன் விளக்கமும்**

## பரிசுத்த ஆவியானவரின் முதல் இறக்கம்

**பரிசுத்தஆவியானவரின் முதல் இறக்கத்தின்போது உலக சரித்திரத்தில் பதிவு செய்யப்பட்ட நான்கு முக்கிய சம்பவங்கள் நடந்தன.**

1. **பலத்த காற்று வீசும் சப்தம் (முழக்கம்)**
2. **இடி முழக்கம் போன்ற சத்தம் (இது காற்றோடு சேர்ந்து கேட்டது)**
3. **அக்கினி மயமான நாவுகள் Flame (ஜுவாலை) காணப்பட்டது**
4. **ஒருவர் வாயில் வெவ்வேறு பாஷைகள் வெளிபட்டு பேசப்பட்டது.**

**பாபேல் கோபுரம் பணித** மக்களை கர்த்தர் பல பாஷைகள் பேசவைத்தபின் அம்மக்கள் உலகம் முழுவதும் பற்பல இடங்களில் குடியேறி வாழ்ந்து வந்தார்கள். அந்த மக்கள் எல்லாரும்

எருசலேமுக்கு தங்கள் வழக்கத்தின்படி **பஸ்கா பண்டிகையில்** பங்கெடுக்க அங்கு வந்து இரவு உறங்கிக்கொண்டிருந்தார்கள். அவர்களோடு **எருசலேம் சமாரியா, கிரேக்கர்கள்** போன்றவர்கள் மற்ற இடத்திருந்தும் **வேற்று பாஷை மக்களும்** அந்த இரவு எருசலேமில் தங்கியிருக்கவேண்டும். அந்த இரவுதான் அந்த நான்கு வித்தியாசமான சம்பவங்கள் நடந்தது.

## பலத்த காற்று....

அதே நாளில் **மேல் அறையில்** பரிசுத்த ஆவியானவருக்காக காத்திருந்த அந்த 120 பேர்களும் இயேசு கூறியபடி **பரிசுத்தஆவியானவர்** இன்னும் வரவில்லையே!என்று ஏக்கத்தோடு ஜெபித்துக்கொண்டிருக்கும்போது முதல் அடையாளமாக கர்த்தர் வாக்களித்தபடி **ஆவியானவர் வந்துவிட்டார்** என்பதை அறிவதற்காக அப்போது பலத்த **காற்றின் அடையாளம்** உண்டானது. **காற்று** பரிசுத்தஆவியானவருக்கு **அடையாளமாக** பழைய ஏற்பாட்டில் பார்க்கிறோம்.

இப்போதுதான் சீஷர்களுக்கு **பரிசுத்தஆவியானவர் இறங்கி விட்டார்** என்று விளங்கிவிட்டது. அந்த ஆவியானவரின் பிரசன்னம் அந்த அறை முழுவதும் நிறப்பியுள்ளதையும் அவர்களால் உணர முடிந்தது. **ஆவியானவருக்கு உருவம் இல்லை** என்பதை நாம் அறிவோம். **பலத்த காற்றின் மூலம்** பரிசுத்தாவியானவர் இறங்கிவிட்டார் என்பதை இதன் மூலம் விளங்குகிறது.

## இடிமுழக்கம் போன்ற சப்தம்....

அன்று உலகத்தின் பல்வேறு பாகங்களில் சிதறடிக்கப்பட்ட யூதர்களும் மற்ற பாஷைக்காரர்களும் அந்த இரவு நல்ல உறக்கத்தில் இருந்திருப்பார்கள்.

**பெரும் சப்தம்** எப்போதும் **ஆட்களை கூட்டி சேர்க்கப்பயன்படும்.** அந்த காரணத்தால் சிதறப்பட்ட யூதர்களையும் மற்றவர்களையும் ஒரு இடத்தில் கூட்டி சேர்க்கவும் அவர்களிடம் **மேசியா** வந்துவிட்டார் என்ற **நற்செய்தியை** அறிவிக்கவும் கர்த்தர் அந்த **இடிமுழக்க சப்தத்தை** இரண்டாவது அடையாளமாக உண்டாக்கினார். இப்போது **காற்றும், சத்தமும்** தூங்கிக்டிகாண்டிருந்த மக்களை அவர்களை ஆச்சரியப்படுத்த அந்த சப்தம் என்னவாயிருக்கும் என்ற ஆவலில் **சப்தம் ஏற்பட்ட வீட்டுக்குமுன்** அத்தனை **யூதர்களும் மற்ற பாஷைக்காரர்களும்** ஓடிவந்து கூடுகின்றனர்.

## அக்கினி மயமான நாவுகள் (ஜுவாலை)...

வீட்டின்முன் ஜனங்கள் கூடி வந்துவிட்டார்கள் என்று அறிந்தவுடன் ஜெபித்துக் கெண்டிருந்த 120 பேரும் வெளியில் வந்து நிற்கிறார்கள். அப்போதுதான் **மற்றொரு அற்புத காட்சியை** மக்கள் காண்கிறார்கள். பரிசுத்தஆவியானவர் **அக்கினிமயமான நெருப்பு ஜுவாலையோடு** 120 பேர்களின் மீதும் ஆவியானவர் இறங்கினார். **தீ ஜுவாலை** 120 சீஷர்கள் **தலையின்மேல் எறிகிறது.** ஆனால் முடி பொசுங்கவில்லை. ஒவ்வொருவர் தலைமீதும் **நெருப்பு ஜுவாலை** (Flame) காணப்படுகிறது.

**இதே காட்சியை** தங்களுடைய **முற்பிதாக்கள்** இந்த நெருப்பு ஜுவாலையைப்பற்றி முன்பே அறிந்திருந்தார்கள். **மோசேயுடன்** கர்த்தர் **முட்செடிபற்றி எரியும்** காட்சியின் வழியாக பேசினார் என்றும், ஆனால் முட்செடி **நெருப்பினால் கருகவில்லை** என்ற **அதிசயத்தையும்** பல சந்ததிகள் வழியாக அவர்கள்கூற கேட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த 120 சீஷர்கள் தலையில் காணும அந்த **நெருப்பு ஜுவலைகள்ளை** (தாங்கள்) கண்டபோது இவர்களும் **நம் தெய்வத்தை சேர்ந்தவர்கள்தான்** என்பதை சுற்றி நின்ற பல பாஷைக்காரர்களும், பல தேசக்காரர்களாலும் உணரமுடிந்தது. அப்போதுதான் சீஷர்கள்மேல் நம்பிக்கை உண்டானது. அவர்கள் கூறுவதை கவனிக்க ஆயத்தமானார்கள்.

## வெவ்வேறு பாஷைகளில் பேசினார்கள்...

இப்போது **மற்றொரு அதிசயம்** அதே இடத்தில் நடக்கிறது. இந்த 120 பேரும் **கலிலேயர்கள் எபிரேய பாஷை** பேசுகிறவர்கள். ஆனால் இந்த 120 பேரும் வெறுமனே வாயை திறக்கிறார்கள். அப்போது **ஒவ்வொருவர்** வாயிலிருந்தும் **பல பாஷைகள்** வெளிவருகிறது. ஒரு பாஷை வெளிவரவில்லை என்பதையும் **பல்வேறு பாஷைகள்** ஒரு வாயிலிருந்து வெளிவருகிறது என்பதையும் கவனிக்கவேண்டும்.

பேசுகிற இந்த 120 சீஷர்களுக்கும் தங்கள் வாயிலிருந்து வரும் அந்த **பாஷைகளைக்குறித்து** ஒன்றும் தெரியாது. **இந்த பாஷை** எந்த நாட்டில் உள்ளவர்களால் **பேசப்படுகிறது?** அது என்ன பாஷை? என்றே இவர்களுக்கு தெரியாது. ஆனால் தங்களுக்கு முன்னே கூடி வந்து நிற்கும் அந்த சிதறடிக்கப்பட்ட **யூதர்களுக்கும்** அங்கு கூடிநின்ற **மற்ற பாஷைக்காரர்களுக்கும்** சீஷர்கள் பேசியது **விளங்குகிறது.** அங்கு நிற்கும் சிலர் கூறுகிறார்கள். அவன் **என்னுடைய தாய் பாஷையில்** பேசுகிறான் என்றார்கள். **மற்ற பாஷைகாரர்களும்** அப்படியே சொல்கிறார்கள் **கலிலேயராகிய** இவர்களுக்கு **எங்கள் பாஷைகள்** எப்படி தெரிந்தது?

**இதில் கவனிக்கவேண்டியது!** இவர்கள் பேசிய **பற்பல பாஷைகளுக்கும் அர்த்தம் தெரிந்தது.** மேலும் **அந்தந்த பாஷைக்குறியவர்கள்** அங்கு நின்றுகொண்டு கவனிக்கிறார்கள். இதைத்தான் பவுல் அவர்கள் 1கொரி 14:8-10 வசனங்களில் கூறுகிறார். **உலகத்தில்** எத்தனையோ **பாஷைகள் உண்டு.** அத்தனை **பாஷைகளுக்கும்** அர்த்தம் உண்டு என்றார்.

❖ **இப்போதுள்ள பெந்தேகோஸ்தே சபையை சார்ந்த அத்தனை விசுவாசிகளும் பாஸ்டர்கள் உட்பட பேசும் பாஷை எதுவும் பாஷையே அல்ல,. அது ஆவியானவர் பேச வைத்ததும் அல்ல.** இவைகளைக்குறித்து பிறகு நான் விளக்கமாக **கூறுவேன். பெந்தேகோஸ்தே சபைகளில் உள்ள பெரும்பாலோர் தாங்கள் எப்படி பாஷை பேசுகிறோம் என்றே விளங்காமல் பேசிக்கொண்டிருக்கிறார்கள். பலர் பழக்கதோஷத்தால் பேசி பழகிவிட்டார்கள். இப்போது தாங்கள் பேசுவது பிழையானது என்று உணர்ந்தும் அந்த பேச்சை அவர்களால் நிறுத்த முடியவில்லை.** இதுதான் நிதர்சனமான உண்மையாகும்.

**மேல் அறையில்** நின்று பேசின 120 பேர் பேசியதில் **செய்தி இருந்ததையும்** கவனிக்க வேண்டும். அப். 2:11ல் 120 சீஷர்களுக்கும் முன்பாக நின்றுக்கொண்டிருந்த அத்தனை பாஷைக்காரரும் கூறுவதை கவனியுங்கள்.

1) **நம் ஜென்ம பாஷையில்** இந்த **கலிலேயர்கள்** பேசுவதை கேட்கிறோமே எப்படி? என்று **கலக்கமடைந்தார்கள்** என்று எழுதியிருக்கிறது.

2) அவர்கள் (அந்த 120 பேர்) **தேவனுடைய மகத்துவங்களை** பேச கேட்கிறோமே! என்று அந்த ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். **தேவனுடைய மகத்துவங்கள்** Mighty Miracles of God என்றால் **பிதாக்கள் காலத்தில்** கர்த்தர் செய்த **அற்புதங்கள், அடையாளங்கள்** கர்த்தர் தம் மக்களை அடிமைதனத்திலிருந்து விடுவித்தது . **கடலை இரண்டாக பிளந்து** தம் மக்களை விடுவிடுத்தது, அதே சமயம் **தம் மக்களின் எதிரிகளை** அதே கடலில் முழுவதுமாக அழித்தது, தினம் சாப்பபிட **வானத்திலிருந்து மன்னாவால்** போஷித்தது, **காடை இறைச்சிகளை** கொடுத்து சாப்பிட வைத்தது. தாம் நேசிக்கும் மக்களுக்காக **எதிரிகளோடு** கர்த்தரே **யுத்தம் செய்து ஜெயம்** கிடைக்கச்செய்தது, **பாலும்- தேனும்** ஓடும் **கானான் தேசத்தில்** கொண்டு வந்து சேர்த்தது, அன்று **வெள்ளத்தினால் உலகம் அனைத்தையும்** அழித்தது. அதில் **தன்னை நேசித்த குடும்பங்களை மட்டுமே** அற்புதமாக காப்பபாற்றியது. இன்னும் அநேக விதமான அற்புதங்களையும் கர்த்தர் தம் மக்களுக்கு செய்த **மகத்துவங்களையும்** சீஷர்கள் வாயால் **அவரவர்களின் பாஷைகளில்** பேசி விளங்கவைத்தது. இவைகளைத்தான் அங்கிருந்த பல பாஷைக்காரர்கள் கேட்டது.

அங்கு கூடி நின்ற பற்பல பாஷைகாரர்களுக்கு குறிப்பாக வெள்ளத்தால் முழு உலகம் அழிக்கப்படும் காலத்துக்குமுன் வாழ்ந்த **பாபேல் கோபுரம்** பணிய முயற்சித்த மக்களுக்கு இந்த தேவனின் **மகத்துவங்கள்** எப்படி தெரியும் ? என்ற கேள்வி எழுகிறதல்லவா? சிதறடிக்கப்பட்ட மக்கள் தங்கள் **மூதாததையர்களின்** வழக்கப்படி எருசலேம் தேவாலயத்துக்கு **பஸ்கா** பண்டிகை ஆசரிக்க **வருடாவருடம்** எருசலேமிற்கு வரும்போது **தங்கள் சந்ததியினர்** தலைமுறை தலைமுறையாய் கேட்டு அறிந்த மேலே குறிப்பிட்ட **தேவ மகத்துவங்களை** அவர்களிடம் கேட்டு அறிந்து தங்கள் பிள்ளைகளுக்கும் **பிள்ளைகளின் சந்ததியினருக்கும்** மறக்காமல் தேவனின் மகத்துவங்களைசொல்லி வைப்பார்கள். அது அவர்களுடைய அன்றைய கால வழக்கமாக இருந்தது.

40வருட வனாந்தர பயணத்தில் நடந்துக்கொண்டே வரும்போது **கால் வலி மறக்க,** சோர்வுகள்நீங்க கர்த்தர் தங்களை வழிநடத்திய **அற்புத செயல்களை பாடலாய் பாடிக்கொண்டே** நடப்பார்கள். அதை தங்கள் **தலைமுறை வம்சாவளியினருக்கு** மறக்காமல் சொல்லிவைத்து தேவனை மகிமைப்படுத்த **அவர்களை பழக்குவார்கள்.** அப்படி பழக்கப்பட்ட அன்றைய தேவனின் **அற்புத செயல்களை** அங்கு கூடியிருந்த மக்கள் கேட்டு அதிசயத்தார்கள். அதனால் இவர்கள் நம் இனத்தை சேர்ந்தவர்கள்தான் என்று உறுதிப்படுத்திக்கொண்டார்கள். அதன்பின் இவர்கள் **என்னதான் சொல்கிறார்கள் என்பதை** கேட்போம் என்று கவனிக்க தொடங்கும்போது **பேதுரு**

பேச தொடங்குகிறார். சகோதரர்களே, எப்படி **இத்தனை பாஷைகளும்** ஒருவருடைய வாயிலிருந்து வெளிவரும். தலைக்குமேல் நெருப்பு **ஜுவாலை** பயங்கர **காற்று** இடிமுழக்க **சப்தம்** ஆகிய இவைகளெல்லாம் **பரிசுத்த ஆவியானவரின்** கிரியைகளாகும். நீங்கள் அறிந்தபடி அனேக ஆண்டுகளுக்குமுன் **யோவேல்** தீர்க்தரிசி மூலமாக கர்த்தர் அருளிய மாம்சமான யாவர்மேல் என் ஆவியை ஊற்றுவேன் என்ற ஆவியானவரின் வாக்குத்தத்ததின்படி இவைகள் **பரிசுத்த ஆவியானவரின்** அற்புத கிரியைகளாகும் என்றார்.

மேலும் அவர் கூறியதாவது இப்போது நீங்கள் காண்கிற இந்த **அற்புதங்கள் பிதாவானவர்** நம்மை மீட்க அனுப்பிய மேசியாவின் நசரேனாகிய **இயேசுகிறிஸ்துவை** கொண்டு தேவன் உங்களுக்குள்ளே **அடையாளம்.** அற்புதம் நடப்பித்து **பிதா** இயேசுவை **மேசியாவாக** உங்களுக்கு வெளிபடுத்தினார்.

ஆனால் அந்த **இயேசு** நடப்பித்த **அற்புதங்கள் அடையாளங்களை** நீங்கள் அறிந்தும், கண்டும் அவரை **மேசியா** என்று நீங்கள் ஏற்றுக்கொள்ளாமல் அவரை **சிலுவையில் அறைந்து கொன்றீர்கள்.** அந்த இயேசுவை **பிதாவானவர் உயிரோடு எழுப்பி** பரலோகத்தில் தமது வலது பாகத்தில் வீற்றிருக்க செய்தார். நம்முடைய **முற்பிதாக்கள்** மரித்தார்கள். அவர்களின் **கல்லறைகளை** நீங்கள் காண்கிறீர்கள். ஆனால் **இயேசுகிறிஸ்து மரித்தார்.** இப்போதும் **உயிரோடு இருக்கிறார்.** அதற்கு ஒரு அடையாளம் **இயேசுவை வைத்த கல்லறை காலியாக** இருக்கிறது.

மேலும் அவர் **உயிரோடு எழுந்ததையும்** இப்போதும் அவர் **உயிரோடு இருப்பதையும் நேருக்கு நேர்** பார்த்த **நாங்களெல்லாம் சாட்சிகள்.** அதனால் நீங்கள் சிலுவையில் அறைந்த இயேசுவே நம்முடைய தெய்வம், **ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார்** என்பதை நீங்கள் அறியவேண்டும் என்று நல்ல **ஒரு சுவிசேஷ செய்தியை** பிரசங்கித்தார்.

அந்த பிரசங்கத்தைகேட்ட அங்கு கூடியிருந்த 16 **பாஷைக்காரர்களும்** கேட்டு இருதயத்தில் **குத்தப்பட்டவர்களாக** மனம்திரும்பி **இயேசுவை மேசியாவாக** ஏற்றுக்கொண்டு **இனி நாங்கள் என்ன செய்யவேண்டும்** என்று கேட்டு **ஞானஸ்நான** ஆலோசனை பெற்று சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அன்று பேதுரு பிரசங்கித்த அந்த **முதல் பிரசங்கத்தில்** 3000 பேர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். அவர்களை வைத்துதான் முதல் **புதிய ஏற்பாட்டு சபை** தொடங்கப்பட்டது. அந்த புதிய ஏற்பாட்டு சபையில் யாரும் அன்னிய பாஷையில் பேசவில்லை.

❖ இயேசு அன்று பேதுருவிடம் கூறியபடி சபையை உன் மூலமாக ஸ்தாபிப்பேன் என்ற வார்த்தை அன்றைக்கு அந்த பெந்தேகோஸ்தே நாளில் நிறைவேறியது. இதற்கு பிறகு உள்ள சபை சரித்திரங்களை நீங்களே **அப்போஸ்தல நடபடிக்கை** புஸ்தகத்தில் வாசித்து அறிந்துக்கொள்ளுங்கள்.

## அந்நியபாஷை:

சரி, இப்போது **பிரச்சனை என்னவென்றால்** இப்படி கூட்டப்பட்ட **கிறிஸ்தவ சபைக்கு**

**அன்னிய பாஷை அவசியமா?** பரிசுத்த ஆவியின் நிறைவுக்கு **அன்னிய பாஷை அடையாளமா ?** என்பதை விளக்குவதான் இந்த கட்டுரையின் முக்கிய நோக்கம் ஆகும்.

- ❖ அன்னிய பாஷை உண்டா? இல்லையா?
- ❖ அன்னிய பாஷையை Dr. புஷ்பராஜ் ஆகிய நீங்கள் நம்புகிறீர்களா?
- ❖ அன்னிய பாஷை இப்போதும் உண்டா? என்பது போன்ற பல கேள்விகள் பல வருடமாக கேட்கப்படுகிறது.

## பயங்கர எச்சரிப்பு:

இவைப்பற்றி நான் விவரிக்கும்முன் ஒரு **பயங்கர எச்சரிப்பை** அறிவிக்கிறேன். பெந்தேகோஸ்தே சபை **பாஸ்டர்மார்களுக்கும்** சபை மக்களுக்கும் இதை எழுதுகிற **டாக்டர். புஷ்பராஜ்** ஆகிய **எனக்கும்** இந்த **எச்சரிப்பு முக்கியம்.** இதை நாம் எல்லாரும் ஞாபகப்படுத்தி கொள்வோம்.

**"மனுஷகுமாரனுக்கு விரோதமாக செய்யப்படும் பாவம் மன்னிக்கப்படும்".**

ஆனால்

**"பரிசுத்தாவியானவருக்கு விரோதமாய் பேசப்படும் பாவம் இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்கப்படமாட்டாது".**

**(மத் 12:31,32. மாற் 3:28,29. லூாக் 12:10).**

இந்த வசனத்தை மனதில் வைத்துக்கொண்டு இவ்விஷயத்தை உங்களோடு பகிர்ந்துக்கொள்கிறேன்.

## அன்னிய பாஷையில் குழப்பம்

தமிழ்நாட்டில் பொய் ஊழியக்கார கூட்டம் உண்டு. அவர்கள் Dr. புஷ்பராஜ் ஆகிய **என்னை குறித்து** பேசும் போதும், எழுதும் போதும் டாக்டர் புஷ்பராஜ் அவர்கள் **பரிசுத்தாவியே இல்லை** என்று கூறுகிறார்கள் என்று துணிந்து பொய்யாய் அறிவிக்கிறார்கள். மேலும் அவர் **பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமா**க பேசுகிறவர். ஆகவே பெந்தேகோஸ்தே சபை மக்கள் அல்லது வாசகர்கள் யாரும் ஜாமக்காரன் பத்திரிகையை வாசிக்கக்கூடாது. வாசித்தால் சாபம் வரும் என்று அறிவித்திருக்கிறார்கள்.

அவருக்கு **குற்றம் சொல்லுகிற ஆவி** இருக்கிறது என்று **நாலுமாவடி லாசரஸ்** என்ற ஊழியர்முதல் **ஜெபத்தில்** பொய்யாய் **பெயர்களை அழைக்கிறவர்கள்.** வியாதியின் பெயரை கர்த்தர் காட்டுகிறார் என்று சகோ. **மோகன் சி.லாசரஸ்** போலவே **ஜெப நேரத்தில்** கூறுகிற மற்ற ஊழியர்கள்வரை, இவர்கள் யாவரும் தொடர்ந்து என்னைப்பற்றி மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் பேசுகிறார்கள். மேலும் இவர்கள் யாவருக்கும் தாங்கள் பேசுவது **பாஷை அல்ல** என்று **இவர்கள் எல்லாருடைய மனசாட்சிக்கும் நன்றாக தெரியும்.** என்றாலும் தொடர்ந்து இவர்கள் **அன்னிய பாஷை** என்ற பெயரில் உளரிக்கொண்டே மற்றவர்களையும் உளர வைக்கிறார்கள். **இவர்கள் எல்லாரும் குறிப்பிட்ட கொரிந்தியர் நிருபத்தில்உள்ள (1 கொரி 14:1) இந்த வசனத்தின்படிதான் அந்நியபாஷை பேசுகிறோம் என்பார்களே தவிற, தாங்கள் பேசுவது பொய்யான பாஷையா என்று யோசிக்க விரும்புவிதில்லை.**

# அன்னிய பாஷை பேச ஆசைப்பட்ட என் முதல் ஆரம்ப அனுபவம்

1964ம் வருடம் இரட்சிப்பின் அனுபவம் பெற்றேன். மனம்திரும்பி சாட்சி கூறி தெரு பிரசங்கம் செய்த காலம் அது. ஆரம்ப நாட்களில் எனக்கு **நல்ல ஜெப ஐக்கியம்** (Fellowship) கிடைத்து. அதில் 5 அல்லது 6 பேர் சேர்ந்து ஒவ்வொரு **வியாழக்கிழமையும்** ஒரு ஸ்கூல் விளையாட்டு மைதானத்தில் மாலை 5 மணிக்கு நாங்கள் ஒன்று கூடுவோம். அந்த நேரத்தில் வேத **வசனத்தைப்பற்றியும்,** ஊழியத்தைப்பற்றியும் ஒருவருக்கொருவர் பகிர்ந்துக்கொண்டு ஜெபிப்போம். இரவு 7 மணி வரை ஜெபிப்போம். அந்த **நண்பர்கள்** நல்ல **உயர்ந்த உத்தியோகத்தில்** இருப்பவர்கள். ஒருவர் டாக்டர் மற்றவர் அரசாங்கத்தில் **தலைமை பொறியாளராக** பணியாற்றியவர். இப்படி மெத்த படித்தவர்களாக ஆவிக்குரிய நண்பர்கள் நாங்கள் ஆறு நண்பர்களும் கூடி ஜெபிக்கும்போது **இருவர் மட்டும்** ஜெபத்தில் **அன்னிய பாஷை** பேசுவார்கள். சில வாரங்கள் கழித்து நான் அந்த இருவரிடம் கேட்டேன், நீங்கள் இருவர் மட்டும் **அன்னியபாஷை** பேசுகிறீர்கள் எப்படி? என்றேன். அதற்கு அவர்கள் அது பரிசுத்தஆவியின் **உயர்ந்த அபிஷேக** அனுபவம் ஆகும் என்றார்.

அப்போது நான் அவர்களிடம் எனக்கும் அந்த **உயர்ந்த அபிஷேகம்** அனுபவமும் **அன்னிய பாஷையும்** கிடைக்குமா? என்று கேட்டேன். உடனே அவர் நிச்சயமாக கிடைக்கும். ஆனால் நீங்கள் CSI சபைக்கார் **உங்களுக்கெல்லாம் கிடைக்காது. எங்கள் சபைக்கு வந்தால் நிச்சயம்** நீங்களும் அன்னியபாஷை பேசலாம் என்றார். நீங்கள் எந்த சபைக்கு என்னை வரச்சொல்கிறீர்கள் என்றேன். அவர் சொன்னார் **சிலோன் பெந்தேகோஸ்தே** சபை என்றார். (இப்போது அந்த சபை TPM(The Penticostal Mission) சபை என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.

ஒருநாள் நாமும் அவர் கூறிய அந்த சபைக்கு போய்தான் பார்ப்போமே என்று ஒரு **ஞாயிற்றுக்கிழமை** காலை TPM சபை ஆராதனைக்கு சென்றேன். அந்த காலத்தில் நான் குடியிருந்த சேலம் நகரில் CPM தவிற வேறு **பெந்தேகோஸ்தே** சபைகள் எதுவும் இல்லாத காலம். அந்த காலத்தில் சேலத்தில் சிலோன் பெந்தேகோஸ்தே சபையானது CPM ஒரு சிறு வீட்டில் நடத்திக்கொண்டிருந்தார்கள். நானும் காலை ஆராதனையில் அங்கு சென்று கலந்துக்கொண்டேன். நல்ல **பாட்டுக்கள்** பாடப்பட்டன. அன்றைய **பிரசங்கசெய்தியும்** நன்றாக இருந்தது. ஆராதனை முடிந்தவுடன் தலைமை பாஸ்டரிடம் சென்றேன். நான் ஒரு **டாக்டர்** என்பதை அந்த பாஸ்டர் தெரிந்து வைத்திருந்தார்கள். அவருடைய சபை விசுவாசியின் குடும்பம் ஒன்று என் வீட்டின் அருகே இருந்தது. அவர்களை சந்திக்க **பாஸ்டர்** அடிக்கடி அங்கு வருவார். அப்போது அவர் என்னை பார்த்திருக்கலாம். ஆகவே அவராகவே என்னிடம் வந்தார். டாக்டர் உங்களை எங்கள் சபையில் பார்ப்பது எனக்கு சந்தோஷம். இனி அந்த **செத்த சபைக்கு**(CSI) போகாதீர்கள் என்றார். நான் சொன்னேன். பாஸ்டர் எனக்கு பரிசுத்த**ஆவியின் அபிஷேகமும், அன்னிய பாஷை** என்கிறீர்களே, அது எல்லாம் எனக்கு வேண்டும் என்றேன். உங்கள் சபை விசுவாசிதான் இங்கு என்னை போகக்சொன்னார் என்றேன்.

உடனே பாஸ்டர் கூறினார். ஓ **அன்னியபாஷை அபிஷேகமா?** அதற்கு நீங்கள் **சனிக்கிழமை** மாலை எங்கள் **காத்திருப்பு** கூட்டத்திற்கு வரவேண்டும். அப்போதுதான் **பரிசுத்தாவி அபிஷேகம்** கிடைக்கும் என்றார். உடனே நான் ஏன் **ஞாயிற்றுக்கிழமை** காலை இந்த ஆராதனையில் **ஆவியானவர் வரமாட்டாரா?** காலையில் அந்த அபிஷேகம் கிடைக்காதா? என்றேன். அப்படியல்ல புதிய நபர்களுக்கு அதற்கான வேத பாடம் படிப்பித்து தருவோம். ஆகவே நீங்கள் சனிக்கிழமை **காத்திருப்பு கூட்டத்திற்கு** வந்துவிடுங்கள் என்றார். நானும் சனிக்கிழமை போய்தான் பார்ப்போமே! என்று தீர்மானித்து பாஸ்டரிடம் ஜெபித்து விடைபெற்றேன்.

**சனிக்கிழமை** மாலை அரை நாள் ஆஸ்பத்திரி போகாமல் என் வாகனத்தில் CPM (TPM) சபைக்கு வந்து சேர்ந்தேன். அங்கு வேத பாடம் ஒன்றும் நடக்கவில்லை. பல புதிய விசுவாசிகள் இரண்டு **வரிசையாக** பக்கம் பக்கமாக **முழங்காலில்** நின்று **ஸ்தோத்திரம். ஸ்தோத்திரம்** என்று கூறிக்கெண்டே கைகளை**வேகமாக தட்டிக்கொண்டே** தலையைஆட்டி **உடலை குலுக்கி** என்னென்னவோ சேஷ்டைகளை செய்துக்கொண்டிருப்பதை கண்டேன். அவர்களில் சிலர் அழுகிறார்கள், சிலர் முகத்தை கோணலாக்கி பல்லை கடித்து **மலசிக்கல் வந்தவர் கஷ்டப்படுவார்களே,** அப்படியிருந்தது அவர்களின் முகங்கள். பாஸ்டர்கள் இரண்டு பேர் இப்படியும் அப்படியும் நடந்து **ஸ்தோத்திரம்** சொல்வது **இந்த வேகம்** போதாது **இன்னும் வேகமாக! இன்னும் வேகமாக!** இப்படி அவரும் வேகமாக கூற, **டிரம் சப்தம்** மிக வேகத்தில் அடிக்க பலர் உடனே **த்தோ,த்தோ,தோ,தோ** என்று கூறியவுடன் அன்னிய பாஷை வந்துவிட்டது!. அபிஷேகம் கிடைத்துவிட்டது!. **அல்லேலுயா** என்று அந்த பாஸ்டர்கள் மகா சப்தமிட்டனர். ஸ்தோத்திரம் சொன்ன அவர்களில் பலருக்கு வியர்த்து வியர்வை ஒழுக கொஞ்ஜம்கொஞ்ஜமாக சப்தம் அடங்கினது.

உடனே பாஸ்டர் **அன்னிய பாஷை கிடைத்தவர்கள்** யாவரும் புது வரிசையில் போய் முழங்காலில் நின்று ஜெபியுங்கள் என்றார்.

**அபிஷேகம்** கிடைக்காதவர்கள் இனி **ஸ்தோத்திரம்** சொல்லவேண்டாம்!. **இயேசுவின் இரத்தம்** என்ற வார்த்தையை **வேகமாக கூற வேண்டும்** என்றார். எனக்கு தெரியும்! **இயேசுவின் இரத்தம்** என்ற வார்த்தையை **வேகவேகமாக கூறினால்** வாய் குளறி நிச்சயம் உளரல் சத்தம் வரும். அதைபோய் **பாஷை** என்று இவர்கள் சர்ட்பிகேட் கொடுத்து மக்களை திருவிருந்துக்கு அனுமதிக்கிறார்கள். இது எத்தனை பெரிய **ஏமாற்றுத்தனம்!.**

**ஆவியானவர்** பெயரை சொல்லி இவர்கள் யாவரும் விளையாடுகிறார்கள். இதன் **ஆபத்து** எத்தகையது என்று **பாஸ்டருக்கும்** அதைக்குறித்து பயமில்லை, உதவி பாஸ்டருக்கும் பயமில்லை. பல சபைகளில் **அந்நியபாஷையை** சபை விசுவாசிகளின் பிள்ளைகளுக்கு சிறு வயதிலேயே **சொல்லிக் கொடுக்கிறார்கள்.**

நான் கர்த்தரை துதித்தேன். நல்ல வேளை கர்த்தாவே இந்த **பைபத்தியக்கார கூட்டத்தில்** நான் அகப்படாமல் தப்பித்தேன் என்று மனதில்நினைத்துகொண்டு என் வாகனத்தில் ஏறி வீடு வந்து சேர்ந்தேன். இதை வாசிக்கிறவர்கள் இப்போது சொல்லுங்கள். நான் அவர்கள் ஜெபத்தில் பேசியதை **உளரல்** என்ற நினைத்தது தவறா? இந்த எண்ணம் எனக்குள் வந்தவுடன்

ஆவியானவரை நான் **துக்கமடைய செய்திருப்பேனோ** என்று நினைத்து சோர்ந்துப்போனேன். அதிலிருந்து **வெளியூர்களுக்கு** போகும்போது அங்குள்ள **பல பெந்தேகோஸ்தே சபைகளுக்கு** செல்லுவேன். வெவ்வேறு ஞாயிற்றுகிழமைகளில் சென்று அவர்கள் **எப்படி பாஷைகளை பேசுகிறார்கள்** என்பதை கவனிக்க ஆரம்பித்தேன்.

**எல்லா பெந்தேகோஸ்தே** சபைகளிலும் **அன்னிய பாஷை பேச கற்றுக்கொடுப்பதையும்** கவனித்தேன். தாங்கள் பாஷைகளை **கற்றுக்கொடுப்பது தவறு** என்று அந்த **பாஸ்டர்களுக்கும்** நன்றாக தெரியும். **மக்களை பரவசப்படுத்தி** அவர்களை **ஏமாற்றுகிறோம்** என்றும் **மிக நன்றாக தெரியும்** என்றாலும் துணிந்து செயல்படுகிறார்கள். ஏமாறும் பல விசுவாசிகளும் அதை நம்புகிறார்கள். அந்த **சத்தம்,** உளரல் அவர்களுக்கு **பரவசத்தை** கொடுக்கிறது.

அந்த சபைகளிலேயே சில நல்ல விசுவாசிகள் உண்டு. அவர்களுக்கு **வேத அறிவும்** உண்டு என்றாலும் அவர்களும் **அன்னிய பாஷையில்** பேசுகிறார்கள். தாங்கள் எப்படி அன்னிய பாஷையில் பேசுகிறோம் என்பது அவர்களுக்கே விளங்கவில்லை. அவர்களுக்கு அதை விளக்கவும் தெரியவில்லை.

# மற்றொரு நண்பரின் அந்நியபாஷை அனுபவம்:

❖ ஒரு பட்டதாரி தன் மனைவி IPC என்ற **சபை ஆராதனைக்கு** போகிறவர். அவரை காரில் கொண்டுபோய் விட்டுவிட்டு இவர் CSI **சபை ஆராதனைக்கு** சென்றுவிடுவார். பிள்ளைகள் பிறந்து வளர்ந்த பின் பிள்ளைகளை CSI ஞாயிறு பள்ளியில் சேர்த்து தன்னோடு CSI ஆராதனையில் பிள்ளைகளும் பங்குக்கொள்ளசெய்கின்றர். இது கணவனும், மனைவியும் செய்துகொண்ட **ஒப்பந்தம்** ஆகும். **திருமண நிச்சயமாகும்போதே** நீ பெந்தேகோஸ்தே சபை பின்னணியில் வளர்ந்தவள். அதனால் நீ **பெந்தேகொஸ்தே** சபைக்குபோவதை நான் தடுக்கவில்லை. ஆனால் நான் **CSI சபைக்குத்தான் போவேன்.** ஆனால் என்னையும் நம் பிள்ளைகளையும் **CSIசபைக்கு ஆராதனைக்கு** போவதை நீ தடுக்கக்கூடாது என்ற ஒப்பந்தம் செய்துக்கொண்டதாக கூறினார்.

ஆனால் சில ஆண்டுகள் கழித்து ஒருநாள் விசேஷ கன்வென்ஷன் கூட்டம் அந்த IPC சபையில் நடந்தது. அதற்கு இவர்கள் எல்லாரும் **குடும்பமாக கலந்துக்கொண்டார்கள்.** நானும் பிள்ளைகளும் அந்த கண்வென்ஷனில் கலந்துக்கொண்டது மனைவிக்கு சொல்ல முடியாத சந்தோஷம். அதன்பின் அடிக்கடி மாதத்தில் **மூன்று வாரங்கள் IPC சபைக்கு** தொடர்ந்து சென்று தன் மனைவி பிள்ளைகளுடன் கலந்துக்கொள்ள ஆரம்பித்தேன் என்றார். நாளாவட்டத்தில் ஒரு **புது பாஸ்டர்** அந்த சபைக்கு வந்தார். அவர் **நன்றாக செய்தி** கொடுக்கிறார் என்பதால் இப்போது **எல்லா வாரமும்** IPC சபையில் கலந்துக்கொள்ள ஆரம்பித்தேன். ஒருநாள் நான் கலந்துக்கொண்ட **அந்த சபை ஆராதனையில்** ஜெப நேரத்தில் நானாகவே **அன்னிய பாஷை பேசினேன்.** அது எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. ஆனால் அந்த விவரத்தை என் மனைவிடம் கூறவில்லை.

முன்பெல்லாம் IPC பெந்தேகோஸ்தே சபையில் நான் செல்லும்போது ஆண்கள் பகுதியில் தரையில் அமர்ந்து இருப்பேன். **ஜெபவேளையில்** என்னை சுற்றி உள்ளவர்கள் எல்லாரும் **பாஷை பேசுவார்கள்.** ஆனால் நான் மட்டும் **கண்ணைமூடிக்கொண்டு** ஜெபத்தில் இருப்பேன். ஒரு

நாள் திடீர் என்று என்னை அறியாமல் **நானும் அன்னிய பாஷையில்** பேசினேன். அதிலிருந்து இப்போதுவரை நான் **அந்நியபாஷையை** தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறேன். இதைக்குறித்து டாக்டராகிய நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? நான் **யார் சொல்லிக்கொடுத்தும்** பாஷை பேசவில்லை! **நானாகத்தான்** பேசினேன்! இப்போதும் பேசுகிறேன்! இதற்கு உங்கள் அபிப்ராயம் என்ன? என்று கேட்டார்.

நான் கேட்டேன், தம்பி, உங்கள் **மனசாட்சியின்படி** சொல்லுங்கள். நீங்கள் **பாஷை பேசியதைப்பற்றி** நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? என்றேன். அதற்கு அவர் **அதுதான் எனக்கும் விளங்கவில்லை** என்றார். உங்களுக்கும் **விளங்கவில்லை.** ஆனால் **அன்னிய பாஷை** என்ற பெயரில் பேசுகிறீர்கள். ஆகவே இது **மனசாஸ்திரபடி** நீங்கள் அன்னிய பாஷை பேசியது உண்மைதான் என்று ஒத்துக்கொள்கிறேன். உங்களை சுற்றி **அன்னிய பாஷை** பேசும் **ஜெப சத்தம்** காதில் கேட்க நீங்கள் மட்டும் அமைதியாக இருந்திருக்கிறீர்கள். நாம் அடிக்கடி **காதால் எதை கேட்கிறோமோ** அது அப்படியே உங்கள் மனதில் பதிய ஆரம்பித்துவிடும் அந்த சத்தத்தை நீங்கள் திரும்பதிரும்ப கேட்டுகேட்டு நீங்களும் அந்த பழக்கத்தில் உங்களை அறியமாலேயே **அந்நியபாஷை பேச ஆரம்பித்துவிட்டீர்கள்** என்றுதான் அதற்கு அர்த்தம். **அது ஆவியானவர்** செயல் அல்ல. நீங்கள் அன்னிய பாஷை பேசியதால் கர்த்தருக்கு என்ன பிரயோஜனம், உங்களுக்கு என்ன பிரயோஜனம்?

❖ உதாரணமாக **சினிமா பாட்டை** பாடவிரும்பாதவனும் ஒரு குறிப்பிட்ட **சினிமா பாடல்** அதுவும் இவரை கவர்ந்த நல்ல இசை,நல்ல ராகம் அந்த இசை **பஸ்ஸில்** பிரயாணம் செய்யும் போதும் கேட்கிறீர்கள். ஒரு **கல்யாண வீட்டுக்கு** போகும் போதும் அந்த பாடலை நீங்கள் கேட்க நேரிடுகிறது. **பண்டிகை** நாட்களிலும் அந்த **பிரபல இசையை** ஒலிபெருக்கியில் கேட்கிறீர்கள். இப்படி நீங்கள் **விரும்பிய ராகம்** பல நாட்கள் தொடர்ந்து பல இடங்களில் கேட்க நேரிடுகிறது. இப்போது என்ன நடக்கும் தெரியுமா? அந்த ராகத்ததை நீங்கள் **முயற்சிக்காமலே யோசிக்காமலே** வேலைசெய்யும் நேரத்திலும்,**குளிக்கும்போதும்** உங்கள் வாயில் **அந்த ராகத்தை** நீங்களே **முணுமுணுக்க** ஆரம்பிப்பீர்கள். காரணம், அந்த **ராகத்தை** நீங்கள் **ரசித்திருக்கிறீர்கள்.** ஆகவே உங்கள் வாயில் **அந்த ராகம்** மட்டும் தானாக வெளிவரும் மனோத்துவ ரீதியில் பலருக்கு இப்படி நடந்திருக்கிறது. இதை எழுதுகிற நானே ஒரு குறிப்பிட்ட சினிமா பாடலாகிய சின்னசின்ன ஆசை என்ற சினிமா ராகத்தை எனக்கும் தெரியாமல் முணு முணுத்திருக்கிறேன். சிறிது நேரம் கழித்து திடீரென்று என் வாயில் விசிலடித்து அதே ராகத்தை **பாடும்போது** அந்த குறிப்பிட்ட சினிமா பாடலின் ராகம் மட்டும் எப்படி என் வாயில் வந்தது. யாராவது நான் பாடுவதை கேட்டிருந்தால் என்ன நினைப்பார்கள்? ஊழியக்காரர் வாயில் சினிமா டியூனா? என்று நினைக்கமாட்டார்களா? என்ன **முட்டாள்தனம்** செய்துவிட்டேன்! என்று என்னை நானே சலித்துக்கொண்டேன் !

ஆகவேதான் **அன்னியபாஷை** பேசும் உபதேசத்தை ஒரு காலத்தில் வெறுத்த நீங்கள் உங்கள் **மனைவியை சந்தோஷப்படுத்த** உங்களுக்கு பிரியமில்லாத **பெந்தேகொஸ்தே சபை ஆராதனையில்** தொடர்ந்து கலந்துக்கொண்டதால் ஏற்பட்ட **பழக்கதோஷம்தான்**

உங்களின் **அந்நியபாஷை** அனுபவம் என்றேன். அதுபோலவே சபையில் ஆராதனையில் மட்டும் நீங்கள் **அந்நியபாஷையில் பேசியது ஆவியானவர்** உங்களை பேசவைத்தது அல்ல. இப்படி நான் விளக்கியவுடன்தான் அவர் நான் ஏன் பேசினேன்? யாருக்காக பேசினேன்?. அதில் **என் ஆத்துமாவுக்கு** என்ன நன்மை? நான் அன்னியபாஷையில் பேசியதால் **கர்த்தருக்கு என்ன பிரயோஜனம்?** நான் பேசியது எனக்கு **பக்திவிருத்தியை உண்டாக்கவில்லையே!.** வேத **வசனம்** தான் **பக்திவிருத்தியை** உண்டாக்கும் என வேத புத்தகம் போதிக்கிறது. இந்த விவரங்களை நான் அறிந்திருந்தும் எப்படி நான் **மூளைசலவை** செய்யப்பட்டு நானே **அந்நியபாஷை** பேசும் அளவு அடிமையாய் போனேன்! **என் நிலை மறந்து** என் உண்மையான ஜெபத்தில் நான் **ஆழ்ந்திருக்கும்போது** பலமுறை **காதால் கேட்ட பாஷைகளின்** சத்தம் என்னையே **அந்நியபாஷையை பேச வைத்துவிட்டது** என்பதை இப்போது உணர்கிறேன் எனறு கூறி முடித்தார்.

# இனி வரும் மாதங்களில்....

இதுவரை வாசித்த பகுதிகளில் எழுதப்பட்ட கேள்விகளுக்கான பதிலும் விளக்கங்களும் **வசனத்தின்** அடிப்படையில் எழுதுவேன். அதில் 1 கொரி 14:12 **வசனங்களுக்கான** விளக்கமும் எழுதுவேன். ஜெபத்தோடு வேதவசனத்தை கையில் வைத்துக்கொண்டு எழுதப்பட்ட விஷயங்களை ஒப்பிட்டு பாரத்து தியானியுங்கள்.

## உங்களுக்கு நான் திட்டமாய் கூற விரும்புவது

☞ **பரிசுத்த ஆவியானவர் உண்டு -** அன்னிய பாஷை பேசாதீர்கள்

☞ **அன்னிய பாஷை உண்டு** - அது சபைகளுக்கு கொடுக்கப்பட்டதல்ல.

**வேத புத்தகம் எழுதப்படும் காலத்துக்குமுன் உள்ள புதிய ஏற்பாட்டு சபைகளுக்கு அன்னிய பாஷை வரமாக கொடுக்கப்பட்டது.**

☞ **இப்போது அன்னிய பாஷை இல்லையா?** நிச்சயமாக உண்டு. ஆனால் நான் முன் குறிப்பிட்டதுபோல **இப்போதுள்ள சபைகளுக்கு கொடுக்கப்பட்டதல்ல!.**

☞ **இப்போது யாராவது தனிநபர் அன்னிய பாஷை பேசுகிறார்களா?.** ஆம் என்பது என்னுடைய பதில். அது **வேத வசன** மூலமாகவும், **சபை சரித்திரம்** மூலமாகவும் நான் அதை உறுதிபடுத்தினேன். அவைகளைப்பற்றி வரும் மாதங்களில் ஜாமக்காரனில் விளக்குவேன்.

☞ அன்னிய பாஷை பேசி தயவுசெய்து நேரத்தை வீணடித்துவிடாதீர்கள். அவரவர்கள் தங்கள் தாய்மொழியில் மனம்விட்டு கர்த்தரிடம் பேசுங்கள். அவருக்கு அனைத்து மொழிகளும் தெரியுமே!

மேலும் கர்த்தர் செய்த நன்மைகளை நினைத்து நினைத்து தாய் பாஷையிலேயே கர்த்தரை துதியுங்கள். அந்த துதிகளையே கர்த்தர் விரும்புகிறார். சிலர் கூறும் தவறான ஆலோசனைகளுக்கு செவிகொடுக்கவேண்டாம். மற்றவர் சொல்லுவதென்ன ? "ஆவி

உற்சாகமுள்ளது. **மாமிசமோ,** (மனித சரீரமோ) பலவீனமுள்ளது" என்று வேதம் கூறுகிறது என்றும் அதனால் நீங்கள் சோர்ந்து இருக்கும்போது **உங்களுக்கு பதிலாக ஆவியானவர் பேசுவார்** என்ற வசனத்தையும் சுட்டிக்காட்டி உங்களை குழப்புவார்கள்.

உங்களால் தாய்மொழியில் மனித சரீரத்தில் அதிக நேரம் துதிக்க முடியாது. ஆகவேதான் பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு பதிலாக பேசுவார் என்று சம்பந்தமில்லாது கூறுவார்கள்.

மனித சரீரத்தில் அதிகநேரம் **துதிக்கவோ,ஜெபிக்கவோ** முடியவில்லையா? என்றாலும் **ஜெபிக்காதீர்கள்**! **துதிக்காதீர்கள்**! **நன்றாக படுத்து தூங்கிவிட்டு** எழுந்து, **முகம் கழுவி தாய் மொழியில்** நன்றாக **துதியுங்கள்.** கர்த்தர் கோபித்துக்கொள்ளமாட்டார். இரண்டு வார்த்தை **ஜெபத்தில் பேசினாலும்** தெளிவாக **உங்கள் தாய்மொழியிலேயே** பேசி ஜெபியுங்கள். அது போதும். **அன்னிய பாஷைப்பற்றி** வசன அடிப்படையில் மேலும் தெளிவை பெற்றுக்கொள்ளுங்கள்.

நான் எழுவதற்கும், **பெந்தேகோஸ்தே** சபையினர் அன்னிய பாஷையைப்பற்றி உபதேசிப்பதற்கும் உள்ள வித்தியாசத்தையும் வேத வசன உண்மையையும் **ஒப்பிட்டு பார்த்து** உண்மையை அறியுங்கள். அவர்களின் அனுபவங்களை உபதேசமாக்கக் கூடாது.

☞ **ஆவியானவரை ஒருபோதும் கூப்பிடாதீர்கள்.** அது தவறு!

யாரெல்லாம் **ஆவியானவரை அழைக்கிறார்களோ** பாஸ்டர் முதல் - சபை விசுவாசிகளும் பிரபர ஊழியர்கள்வரை **அவர்கள் எல்லாருக்குள்ளும் ஆவியானவர் இல்லை** என்று தான் அர்த்தம். அவர்கள் யாவரும் அன்னிய பாஷை பேசுவது **மாய்மாலம்.**

நான் கூறுவதை கோபப்படாமல் நன்றாக கவனியுங்கள்!

**ஆவியானவர்** யாருக்கு உண்டோ அவர்கள் **ஆவியானவரே வாரும்** என்று அழைக்கமாட்டார்கள். அதற்கு பதிலாய் **ஆவியானவரே நீர் வந்ததற்காக** ஸ்தோத்திரம். **என்னுள் இருப்பதற்காக ஸ்தோத்திரம்** என்ற வார்த்தைத்தான் அப்படிப்பட்டவர்கள் வாயிலிருந்து வரும். **எங்களுக்குள்ளே வாசம் பண்ணும் ஆவியானவரே!** என்ற பாடல் மட்டுமே அர்த்தம் உள்ள பாடல் ஆகும்.

**மீதி விவரங்கள் அடுத்த ஜாமக்காரனில் வெளியிடுவேன்.**


## ONLINE BANKING (NEFT)
**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**
SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**
SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

# 2024 ஜனவரி மாதத்துக்கு முன் கர்த்தர் என்னை உபயோகித்த இடங்கள்

2020ல் நான் கொரோனா வியாதியில் 18 நாட்கள் ஆஸ்த்திரியில் சேர்க்கப் பட்டேன். கர்த்தர் என் ஆயுளை நீட்டித்தந்து சுகப்படுத்தி மறுபடியும் ஊழியம் செய்ய என்னை பெலப்படுத்தினார். அதன்பின் இரண்டு வருடங்கள் வீட்டைவிட்டு எங்கும் செல்லவில்லை. இரண்டு வருடங்கள் கழித்து நான் பேசிய முதல் கூட்டம் முதல் 2023 டிசம்பர் 31ம் தேதி வரை கர்த்தர் என்னை உபயோகித்த இடங்கள். உங்கள் ஜெபத்துக்காகவும், ஸ்தோத்திரத்துக்காகவும் வெளியிடுகிறேன்.

## 2022 கூட்டங்கள்

| | |
|---|---|
| 26-2-2022 | **ஆனைக்கட்டி** பெத்தானி (டிரைபல் மிஷன்) மெடிக்கல் சென்டர் ஆப்பரேஷன் தியேட்டர் திறப்புவிழாவும் – ஸ்தோத்திர கூட்டமும் |
| 27-2-2022 | ஞாயிறு ஆராதனை (Tribal Mission) **ஆனைக்கட்டி** ஆராதனை பிரசங்கம் |
| 17-4-2022 | ஞாயிறு ஆராதனை 2½ வருடத்துக்குபின் – நான் வசிக்கும் சேலத்தில் உள்ள CSI லெக்ல ஞாபகார்த்த ஆலயத்தில் உயிர்ப் பிழைத்த என் சாட்சியை கூறினேன். 2½ வருடத்துக்கு பிறகு முதன்முதல் ஆலயத்துக்குள் கால் வைத்த நாளை நன்றியுடன் துதிக்கிறேன் |
| 16-9-2022 | **பெங்களூர்** ஸ்தோத்திரக் கூட்டம் (பாஸ்டர் Babu) |
| 6-10-2022 | Bombay மெத்தடிஸ்ட் கன்வென்ஷன் |
| 29-10-2022 | (கேரளா) **நிலம்பூர்** IPC & டிரைபல் மிஷன் கன்வென்ஷன் |
| 5-11-2022 | **(சென்னை)** ஸ்தோத்திர ஜெப கூட்டம் |
| 3-12-2022 | **பெங்களூர்** Jai Nagar, Christu Alayam (CSI) கன்வென்ஷன் |
| 6-12-2022 | **மதுரை** (இளந்தோப்பு) CSI Church கன்வென்ஷன் |
| 8-12-2022 | **மதுரை** (செல்லூர்) St. Thomas Church கூட்டம் |

## 2023 கூட்டங்கள்

| | |
|---|---|
| 26-1-2023 | **திருநெல்வேலி** (மறவன்விளை) CSI கூட்டங்கள் |
| 17-2-2023 | **Kulasekaram** Salvation Army கூட்டங்கள் (கன்னியாகுமரி மாவட்டம்) |
| 24- 2-2023 | **திருநெல்வேலி** (NGO B Colony) CSI Church கண்வென்ஷன் |

3-3-2023 **(கோயமுத்தூர்)** லட்சுமி மில்ஸ் ( அம்மன் கோயில்)
ADD Memorial CSI Church கூட்டங்கள்
31-3-2023 Sivakasi (Ragland CSI Church) கூட்டங்கள்
3-4-2023 Coimbatore (Christ Church) CSI கூட்டங்கள்
7-4-2023 Bangalore Christu Alayam, CSI Church கூட்டங்கள்
29-4-2023 தூத்துக்குடி Tovipuram CSI Church கூட்டங்கள்
12-5-2023 Pragasapuram CSI Church
19-5-2023 உக்கிரம் கோட்டை CSI Church
26-5-2023 சேரன் மஹாதேவி CMS சுந்தாங்க சபை கூட்டங்கள் (நெல்லை)
4-6- 2023 மதுரை CSI Church கூட்டங்கள்
4-8-2023 நெல்லை மாவட்டம் கரிசல்பட்டி Church கூட்டங்கள்
17-9-2023 RC Chettipatti ( JMS Christ Church) கூட்டங்கள்
22-9-2023 Sathur SBM Church (Sathur) கூட்டங்கள்
26-10-2023 Madurai ( All Souls CSI Church) கூட்டங்கள்

**NORTH INDIA [வட இந்தியா]**

24-10-2023 Gujarath, **Surath FMPB**

**அரேபிய நாடுகள்**

21-11-2023 (Oman) MUSCAT ( JW TLC Church) கூட்டங்கள்

## 2024 கூட்டங்கள்

12-1-2024 கன்னியாகுமரி சாரூர் (திருப்புறம் - மார்தாண்டம் அருகில்) டிரினிட்டி ECI Church
15-1-2024 (கோவில்பட்டி) கெஸ்விக் கண்வென்ஷன் கூட்டங்கள்.

## கேரளா கூட்டங்கள்

26-1-2024 குந்நம்குளம் ஐக்கிய கன்வென்ஷன் கூட்டங்கள் (கேரளா)
16-2-2024 **விக்கிரம சிங்கபுரம்** CSI கன்வென்ஷன் கூட்டங்கள்
10-3-2024 **சேலம்** ஆன்டரசன் சபை கூட்டம்
22-3-2024 **(மஹாராஷ்ட்ரா) சேவா கிராம்** Rural Blessing Mission கூட்டங்கள்
26-3-2024 **வையவிளை** ECI Church கன்வென்ஷன் கன்னியாகுமரி மாவட்டம்
17-5-2024 **மேட்டூர் டேம்** IBT மொழிபெயர்ப்பு ஸ்தாபன கூட்டங்கள்

(மற்ற இடங்கள் **மாநிலங்கள், வெளிநாட்டு** கூட்ட ஏற்பாடுகள் கடித தொடர்பில் இருக்கிறது. தேதிகள் உறுதியான பின்னர் அறிவிக்கப்படும். ஜெபிக்கவும்)

## அன்னிய பாஷையில் நாம் எல்லாரும் ஜெபிப்போம் என்று கூறும் ஊழியரை, பாஸ்டரை நம்பாதீர்கள்.

பாஸ்டர் D. மோகன், நாலுமாவடி மோகன் C. லாசரஸ், ராபின்சன், அலன்பால், T.P.M., I.P.C. மற்ற சில்லரை பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கள் யாவரும் அன்னிய பாஷையில் ஜெபிப்போம் என்று சபையினரை பார்த்து கூறுகிறார்கள். அதை நம்பாதீர்கள் ! அவர்கள் கூறுவது வேத வசன அடிப்படையல்ல.

புதிய ஏற்பாட்டு சபைகளில் **கொரிந்து** சபையை தவிற வேறு எந்த சபையிலும் **அன்னிய பாஷை** பேசப்படவில்லை. **கொரிந்து** நிரூபத்தை தவிர வேதத்தில் புதிய ஏற்பாட்டில் வெளிப்பாடு புத்தகம் வரை எங்கும் **அன்னிய பாஷை** பேசவே இல்லை. **சீஷர்களும் அன்னிய பாஷை** பேசவில்லை என்பதையும் கவனிக்கவும்.

**பவுல்** நீங்கள் எல்லாரும் அன்னிய பாஷை பேசுவதை விரும்புகிறேன் என்று கூறுகிறார். அது **கொரிந்து சபைக்கு** மாத்திரம் பொருந்தும். இவர்கள் யாவரும் கூறும் பொய் உபதேசத்தை வேத வசனத்தோடு ஒப்பிட்டு பார்த்து முடிவெடுங்கள்

**JANUARY-2024**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.